

தமிழரசு
16.8.1996 ரூ.3



# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
ஆவணித் திங்கள்: 1
மலர்: 27 இதழ்: 4
16.8.1996
விலை: ரூ. 3

## இந்த இதழில்

காவிரி நீர் பேச்சு வார்த்தை 2

இன்று புதிதாய்ப் பிறந்தோம் - கவிதை 6

கலைவாணர் நினைவுகள் 8

சிரிப்பின் சக்தி 9

பட்டிக்காட்டுப் பையன்
பள்ளி செல்கிறான் - சிறுகதை 17


வேலை கிடைக்கும் 30

நீர் மேலாண்மை 33


வெண்கலம் வென்ற இந்தியத் தங்கம் 42

யாருண்டு இனிமேலே உன்போல்
நல்லோன்! - கலைஞரின் கவிதை 46

ஆசிரியர் மடல் 47



# காவிரி நதிநீர்

## முதல்வர் கலைஞர்  கர்நாடக முதல்வர்

## பேச்சுவார்த்தை

காவிரி நீர்ப் பங்கீடு பிரச்சினைக்குத் தீர்வுகாண அமைக்கப்பட்ட நடுவர்மன்றம், கர்நாடக அரசு தமிழ்நாட்டுக்கு ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று சில ஆண்டுகளுக்கு முன் இடைக்காலத் தீர்ப்பு ஒன்றைக் கூறியது.

ஆனால் இடைக்காலத் தீர்ப்பை ஏற்று, காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடக அரசு மறுத்து வருகிறது.

இந்த ஆண்டு, காவிரியில் போதிய அளவு தண்ணீர் திறந்துவிடப்படாததால் மேட்டூர் அணையில் மிகக் குறைந்த அளவே தண்ணீர் உள்ளது.

இதைத் தொடர்ந்து நடுவர்மன்ற இடைக்காலத்தீர்ப்பின்படி, காவிரியில் தண்ணீர் திறந்துவிடும்படி தமிழக அரசு வற்புறுத்தியது. அதன்பேரில் கர்நாடக அரசு 5 டி.எம்.சி. தண்ணீர் மட்டும் திறந்துவிட்டது.

ஆனால், மேலும் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது.

ஏற்கெனவே, நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல் படுத்தும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவிடக்கோரி தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இருந்தது.

### உச்சநீதி மன்றத்தின் யோசனை

இந்த வழக்கை, விசாரித்த உச்சநீதி மன்றம் ''காவிரி நீர் பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வு ஒன்றைக் காண தமிழ்நாடு, கர்நாடக மாநில முதலமைச்சர்கள் விரைவில் பேச்சு வார்த்தை நடத்தி சுமூகமான உடன்பாடு ஒன்றை எட்ட வேண்டும்'' என்று யோசனை தெரிவித்தது.

இந்த யோசனையை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும் மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் ஜே.எச். பட்டேலும் வரவேற்றனர்.

உச்சநீதிமன்றம் தெரிவித்த இந்த யோசனைப்படி தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும் கர்நாடக முதல்வர் பட்டேல் அவர்களும் 5.8.96 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினர்.

தமிழ்நாடு சார்பில் முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் திரு. முரசொலிமாறன், மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன், மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. ஆலடி அருணா, தலைமைச்செயலாளர் திரு. கே.என். நம்பியார் மற்றும் உயர் அலுவலர் களும், கர்நாடக முதல்வருடன் மாண்புமிகு துணை முதல்வர் திரு. சித்தராமையா, மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் திரு. நாகே கவுடா, சட்டத்துறை அமைச்சர் நானையா மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

### பேச்சுவார்த்தை முடிந்ததும் பேரவையில் முதல்வர் அறிக்கை

பேச்சுவார்த்தை முடிந்ததும் தமிழக சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் அவர்கள் பேச்சு வார்த்தை குறித்த அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் முதல்வர் அவர்கள் கூறியிருந்ததாவது:-

'உச்ச நீதிமன்றத்தின் விருப்பத்திற்கேற்ப நானும், கர்நாடக முதலமைச்சர் அவர்களும் 5.8.96 அன்று காலையில் தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினோம். இந்தப் பேச்சுவார்த்தை பரஸ்பரம் நட்புணர்வோடு நடைபெற்றது. இதன் விளைவாக, உடனடி இடைக்கால நிவாரணமாக தமிழகம், கர்நாடகம் ஆகிய இரண்டு மாநில விவசாயிகளுக்கும் பாதகம் ஏற்படாத வகையில் காவிரி தண்ணீரை இரு மாநிலங்களுக்கும் பயன் அளிக்கும் வண்ணம் பகிர்ந்து உபயோகித்துக் கொள்வதென்றும் இருதரப்பினரின் தேவைகளையும் ஈடு செய்யும் வகையை மனதில் கொள்வதென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்நாடக மாநிலத்திற்கு தொடர்ந்து இது பற்றிப் பேச கர்நாடக மாநில முதலமைச்சர் எனக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அந்தச் செய்தியையும் இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்து அந்தப் பயணம் ஆகஸ்ட் 15ஆம் தேதிக்குப் பிறகு இருக்கும் என்பதையும் அறிவிக்கின்றேன்.

> **"...இரு மாநில விவசாயிகளுக்கும் பாதகம் ஏற்படாமல் காவிரி நீரை பகிர்ந்து கொள்ள முடிவு ஏற்பட்டது..."**

முதல்வர் இந்த அறிக்கையைப் படித்ததும் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இந்த அறிவிப்பை வரவேற்றும் பாராட்டியும் உரையாற்றினர்.

## அனைத்துக் கட்சி வரவேற்பு

**திரு. சொக்கர் (த.மா.கா.) :** மிக முக்கியமான இந்தப் பிரச்சினையில் உரிய அணுகுமுறையைக் கடைப்பிடித்து தமிழக முதலமைச்சரும், கர்நாடக முதலமைச்சரும் பேசி இரு மாநிலத்தினுடைய விவசாயிகளும் பாதிக்கப்படாத வண்ணம் முடிவெடுத்தமைக்காக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அப்துல் லத்தீப் (இந்திய தேசிய லீக்) :** சொக்கர் அவர்கள் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக நன்றி தெரிவித்துக்கொண்டார். நான் என்னுடைய கட்சியின் சார்பாக மட்டுமல்ல இந்த அவையிலே இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. திருப்பூர் சுப்பராயன் (இந்திய கம்யூனிஸ்ட்) :** நீண்ட காலமாக சிக்கலாக இருக்கக்கூடிய ஒரு பிரச்சினையில் ஆக்கப் பூர்வமான அணுகுமுறையை மேற்கொண்டிருக் கின்ற முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. தாமரைக்கனி (அ.இ.அ.தி.மு.க) :** காவிரி நீர்ப் பிரச்சினையில் கர்நாடக அரசும் தமிழக அரசும் தமிழக முதலமைச்சர் அவர்களும் பேச்சுவார்த்தை நடத்துவது நல்லதுதான். பேச்சுவார்த்தை நடுவர் மன்றத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் இருக்க வேண்டும். தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழினத் தலைவர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு நல்லது செய்வார் என்றே நினைக்கிறோம். நிச்சயம் அது நடக்கத்தான் செய்யும். இந்தப் பேச்சு வார்த்தை வெற்றி பெற அனைத்திந்திய அண்ணா தி.மு.க சார்பில் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"...தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழினத் தலைவர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு நல்லது செய்வார் என்றே நினைக்கிறோம். நிச்சயம் அது நடக்கத்தான் செய்யும் ..."**

**திரு. தீரன் (பா.ம.க.):** ஏற்கனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடுவர் மன்றத் தீர்வுக்கு எந்த வகையிலும் இடைஞ்சல் இல்லாத வகையில் பேச்சுவார்த்தை நடத்து வோம் என்று கூறியபடி, இன்றைக்கு இரண்டு மாநில விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலே இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வு காணப்படும் என்று அறிவித் திருக்கின்றார். எனவே அனைத்துக் கட்சிகள் சார்பாக மட்டுமல்ல, தமிழகத்திலே உள்ள அனைத்து மக்கள் சார்பாகவும் நன்றியையும் பாராட்டுக்களையும் இந்தப் பேச்சுவார்த்தை சிறப்பாக வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**திரு. எல். சந்தானம் (பார்வர்டு பிளாக்):** தமிழகத்தின் முதல்வர் சோழ மண்டலத் தினுடைய விவசாயப் பெருங்குடி மக்களின் இதயத்தைத் தொடுகின்ற அளவுக்கு கர்நாடக மாநில அரசோடு சிறந்ததொரு பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மக்களுக்கெல்லாம் தித்திப்பான செய்தியைத் தெரிவித்திருக்கின்றார்கள். அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் உளப்பூர்வமான பாராட்டுக்களை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி (மார்க்சிஸ்ட்) :** காவிரி நீர்ப் பிரச்சினை சம்மந்தமாக இரண்டு மாநில விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் நம் மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே மிக ஆழமாகத் தலையிட்டு தமிழக மக்களுக்கு உரிய பாதுகாப்பைத் தரும் வகையில் சுமூகமான பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இந்தப் பேச்சு வார்த்தை வெற்றி பெற வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே வாழ்த்துகிறேன்.

**டாக்டர் . கிருஷ்ணசாமி (தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு):** தமிழக மக்களின் நலன்கள் சிறிதும் பாதிக்காதவகையிலே இன்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களும் கர்நாடக முதல் அமைச்சர் அவர்களும் நடத்திக் கொண்டிருக்கும் பேச்சு வார்த்தை வெற்றி பெற தேவேந்திர சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெங்கடசாமி (ஜனதா தளம்) :** தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரத்தோடு எடுத்த நல்ல முடிவிற்காகவும் தேவையான முடிவினை தேவையான நேரத்திலே எடுத்தமைக்காகவும் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ●

கலைவாணர் நினைவுகள்

## டீயே மதுரம்!

கலைவாணர் வீட்டுக்கு ஒரு தமிழ்ப் புலவர் வந்தார். கலைவாணர் தம்பதிகள் புலவரை வரவேற்று உபசரித்தனர். கலைவாணரின் துணைவியார் மதுரம் புலவருக்கு டீ கொண்டு வந்து கொடுத்தார். புலவர் டீயைச் சுவைத்துப் பருகினார். டீ எப்படியிருக்கிறது? என்று கேட்டார் கலைவாணர். டீயே மதுரம்! என்று சுவையோடு கூறினார் புலவர்.

# தமிழக விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உதவ முடியுமோ அந்த அளவுக்கு உதவுவோம்

## கர்நாடக முதல்வர் ஜே.எச். பட்டேல் பேட்டி

சென்னையில் காவிரி நீர் பேச்சுவார்த்தை முடிந்ததும் மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு. ஜே.எச்.பட்டேல் செய்தியாளர்களிடம் பேசினார்.

''நானும் தமிழக முதல்வரும் மனம் திறந்து பேசினோம். பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இரு மாநில விவசாயிகளின் நலன்களும் பாதிக்காத வகையில் பேச்சுவார்த்தை இருக்க வேண்டுமென்பதை இருவரும் உணர்ந்திருக்கிறோம்.

**''...தமிழக விவசாயிகளின் நலன் நிச்சயம் பாதுகாக்கப்படும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதில் இருவரும் அக்கறையுடன் இருக்கிறோம்...''**

இது சம்பந்தமாக மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்த தேவை ஏற்பட்டால் நான் தமிழக முதலமைச்சரை இங்கு வந்து சந்திப்பேன் அல்லது அவர் அங்கே வந்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

பேச்சுவார்த்தை ஒரு வாரத்தில் நடைபெறும். 5.8.96 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது தமிழக விவசாயிகளுக்கு, தண்ணீர் வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் கேட்டார். தண்ணீர் தர நாங்கள் ஒத்துக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு தண்ணீர் தருவது, எப்போது தருவது என்பது பற்றி பேசி முடிவு செய்யப்படும். இரு தரப்பினரும் பயன் அடையும் வகையில் இந்த முடிவு இருக்கும்.

தமிழக விவசாயிகளின் நலன் நிச்சயம் பாதுகாக்கப்படும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதில் இருவரும் அக்கறையுடன் இருக்கிறோம்.

தமிழ்நாட்டில் சம்பா பயிருக்கு ஏற்கனவே நாங்கள் ஐந்து டி.எம்.சி தண்ணீர் திறந்துவிட்டிருக்கிறோம். தமிழக விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உதவவேண்டுமோ அந்த அளவுக்கு உதவுவோம்.

நாங்கள் இரு மாநில விவசாயிகள் நலன் பற்றித்தான் பேசினோம். நடுவர் மன்றத் தீர்ப்பு பற்றிப் பேச வில்லை.''


---

### அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை** - நீண்டகால காவிரி நதிநீர் பிரச்சினைக்கு நிலையான தீர்வுகாண சென்னையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடன், மாண்புமிகு கர்நாடக முதல்வர் திரு.ஜே.எச். பட்டேல்.

**இரண்டாம் அட்டை** - *31.7.96* அன்று சென்னையில் மூன்று சமூக விரோதிகளை வீழ்த்திய காவல்துறை உயர் அலுவலர்கள் காவல்துறை தலைவர் திரு. கே.கே. ராஜசேகர நாயர் தலைமையில் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்துப் பாராட்டு பெற்றார்கள்.

**நான்காம் அட்டை** - திரைப்பட உலகில் சிரிக்க வைத்து சிந்திக்க வைத்த நகைச்சுவை அமரர். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நினைவு *(30.8.1957)*



# இன்று புதிதாய்ப் பிறந்தோம்


எழில்சிந்தும் இயற்கையிலே இன்பம் பாடி
என்றைக்கோ பிறந்திங்கே வாழு கின்றோம்.
வழியறியா ஏழைகளை வாட்டு கின்ற
வறுமையினைக் கொடுமையினைக் களைந்து விட்டு
விழிபோன்ற மேலான நன்மை செய்து
விரிவான வசதிகளை விரிவாய் ஆக்கிக்
கழிபேரு வகையிலே நாம் வாழ்வ தற்குக்
கவினார்ந்த புதிதான உலகு செய்வோம்.


ஊற்றெடுக்கும் இன்னமுதாம் பாக்கள் தம்மை
உள்ளத்தே முறையாக வரம்பு கட்டி


தமிழரசு
கவிதைப்
போட்டி
முதல் பரிசுக்
கவிதை












ஆற்றொழுக்காய் அனைவரையும் கேட்க வைத்தே
ஆற்றலையும் அறத்தினையும் அதனிற் காட்டி
நாற்றிசையும் நல்லிசையைப் பரப்பி நாட்டி
நற்றமிழர் வாழ்வினையும் உயர்த்தி விட்டால்
வீற்றிருப்போம் வல்லவராய் வீறு கொண்டே!
விளங்கிடுவோம் எந்நாளும் புதுமை யோடு.

நன்னெறியை நவின்றிடுமே நல்லோர் நெஞ்சில்
நற்கருத்தைப் புகுத்திடுமே நல்லோர் நாவில்
புன்னெறியைக் கடித்துரைக்கும் கல்லார் மாட்டு
புகழ்க்கொடையை விரித்துரைக்கும் கயவர் மாட்டு
பன்னெறியும் உணர்ந்தோரும் பகரு மாறு
பண்பாட்டை ஏற்றத்தைப் பாது காக்கும்
மன்னெறியாம் புத்தாட்சி காண வேண்டி
மகிழ்வோடு நாமின்று புதிதாய்ப் பிறந்தோம்.

**புலவர் .வீ. வீராச்சாமி,**
எம்.ஏ.எம்.எட்.
அரசு உயர்நிலைப்பள்ளி,
உறங்கான்பட்டி 625 109
மதுரை மாவட்டம்

இக் கவிதை ரூ. 200/-
பரிசு பெறுகிறது.



சேலத்தில் அவர் தங்கியிருந்த விடுதிக்கு என்னை அழைத்துக்கொண்டு காரில் புறப்பட்டார். என்னுடன் உடுமலை நாராயண கவிராயரும், அவரது மாணவர் செல்லமுத்துவும் இருந்தார்கள். ''மணமகள்'' வசனம் எழுத எவ்வளவு பணம் வேண்டும்?'' என்று கலைவாணர் என்னைக் கேட்டார். ''எனக்குத் தெரியாது'' என்று பதில் சொன்னேன். என்னைச் சொல்லுமாறு கட்டாயப்படுத்தினார். நான் கடைசி வரையில் பணம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இறுதியாக அவர் ஒரு துண்டுச் சீட்டில் ஏதோ எழுதி அதைச் சுருட்டி மடக்கி என் கையிலே கொடுத்தார். நான் அதை பிரித்துப் பார்க்காமலேயே கையில் வைத்துக்கொண்டு இருந்தேன்.

00001

10000

''பிரித்துப் பாருங்கள்'' என்று என்னைப் பிடிவாதப்படுத்தினார். துண்டுத் தாளைப் பிரித்துப்பார்த்தேன். அதில், நாலு பூஜ்யங்கள் எழுதபட்டிருந்தன! எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'என்ன, நாலு பூஜ்யங்கள் எழுதிக் கொடுத் திருக்கிறாரே?' என்று சற்றுத் திகைத்தேன். அவர் என்னைப் பார்த்து களங்க மற்ற புன்னகை புரிந்துகொண்டிருந்தார். நான் அதில் ஏதோ நகைச் சுவை இருக்கிறது என்பதை மட்டும் புரிந்து கொண்டு, ''சரி, சம்மதம்' என்று கூறினேன். அவர் விழிகளை அகலமாக ஆக்கிக் கொண்டு, 'அப்படியா, சம்மதமா?'' என்று ஆவலோடு கேட்டார். நான் மறுபடியும், ''ஆமாம், சம்மதம்தான்!' என்று சொன்னேன்.

## கலைவாணர் நினைவுகள்

கலைவாணர், கண்களைக் கேலியாகச் சிமிட்டிக் கொண்டே என்னை மறுபடியும் பார்த்து, ''நான்கு பூஜ்யங்கள் போட்டிருக்கிறேன். அதற்குச் சம்மதமா என்று கேட்கிறேன். 'ஆமாம்' என்கிறீர்கள். நான் நம்பலாமா?'' என்று கேட்டார். ''ஒத்துக் கொண்டுதான் ஆமாம் என்கிறேன்.'' என்று பதில் சொன்னேன்.


''சீட்டைக்கொடுங்கள்'' என்று வாங்கிக் கொண்டார்.

''இதில் 'ஒன்று எங்கே போடுவது? முன்னாலா? பின்னாலா?'' என்று கேட்டார். ''எங்கு வேண்டுமானாலும் போடுங்கள் என்றேன். அவர் நான்கு பூஜ்யங்களையும் கடந்து, கடைசியாக ஒன்று என்று எழுதினார். அதாவது 00001 என்று எழுதப்பட்ட சீட்டை என்னிடம் கொடுத்தார். சிரித்துக் கொண்டே, ''சரி தானா?'' என்றார். நான் சரிதான் என்று கூறிய வாறு அவர் கொடுத்த சிறிய சதுரமான சீட்டைத் தலைகீழாக மாற்றிக் காட்டினேன். அப்படி மாற்றியபோது 1 முதலிலும், நான்கு பூஜ்யங்கள் அதனைத் தொடர்ந்தும் 10,000 என்று, காட்சியளித்தது. அதைப் பார்த்துவிட்டுக் கலைவாணர், ''ஆக, என்னையே ஏமாற்றி விட்டீர்களே!'' என்று வயிறு குலுங்கச் சிரித்தார். ●

**கலைஞரின்**
**நெஞ்சுக்கு நீதி நூலிலிருந்து**
**(பக்கம் : 140)**

**அறிவுக்கு இந்த வையகம் எப்போதுமே தன் வணக்கதைச் சொல்லும். திறமைக்கு ஆதரவை தரும். தூய உள்ளமதை வரவேற்கும்.**

**– இங்கர்சால்.**




ஆர். இரத்தினம்

''நகைச்சுவை உணர்ச்சி மனிதனுக்குக் கிடைத்ததனிவரம்''. சிரிப்பு மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய வரப்பிரசாத மாகும். உலகிலுள்ள ஜீவராசிகளில் மனிதன் ஒருவனால்தான் சிரிக்க முடியும். நகைச் சுவையை உணரமுடியும். அவனை மகிழ்ச்சி யாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும் சிரிப்பு. மகிழ்ச்சியான உணர்ச்சியை ஏற்படுத்தி, உடலில் ஆரோக்கியமான இரசாயன மாற்றத்தை ஏற்படுத்துகிறது இது. கசப்பு உணர்ச்சிகளான



கோபம், பயம், வருத்தம், குற்ற உணர்வு முதலியன உடலில் எதிர்மறையான இரசாயன மாற்றத்தை ஏற்றபடுத்தக்கூடியது. சிறிது நேரம் கூட விளையாட்டின்றி, எப்பொழுதும் வேலை யென்று இருந்தால் ஒருவரை வாழ்க்கையில் சுவாரஸ்யமில்லாதவனாக ஆக்கிவிடும். விளையாட்டும் நகைச்சுவையும் ஒருவரின் புத்தியைக் கூர்மைப்படுத்தி அவருடைய வாழ்க்கைக்குப் பிரகாசத்தையும், ஆரோக்கி யத்தையும் கொடுக்கும்.

நகைச்சுவையை 3 விதமாகப் பிரிக்கலாம். 1. மற்றவரை மட்டம் தட்டிச் சிரிப்பது. 2. மற்றவரைத் திருப்திப்படுத்த சிரிக்க வைப்பது, சிரிப்பது. 3. நாமாக சந்தோஷப்பட்டுச்சிரிப்பது. மூன்றாவது சிரிப்புத்தான் நல்ல பலனைக் கொடுக்கும்.

### இறுக்க நிவாரணி

ஒரு நாளில் ஒரு முறையேனும், வயிறு குலுங்கச் சிரித்தால் மருத்துவரிடம் போகவே தேவையில்லை. வயிறு குலுங்கச் சிரிப்பது உடலைக் குணப்படுத்த உதவுகிறது. வயிறு குலுங்கச் சிரிக்கும் பொழுது உடல் நிமிர்ந்து, விரிந்து இருப்பதால் நுரையீரல் அதிகப் பிராண வாயுவை உள்ளிழுக்கின்றது. வயிற்றிலுள்ள

உறுப்புகள் அழுத்தத்திலிருந்து விடுபடுவதுடன், அவைகளுக்கு அதிகப் பிராண வாயு உள்ள இரத்தம் கிடைக்கிறது. மேலும் உறுப்புகளில் அதிர்வு ஏற்பட்டு அதனால் அதிக இரத்தம் செலுத்தப்படுவதுடன் வயிற்று உறுப்புகளைப் பிடித்துக் கசக்கி விடுகிறது. வயிற்று உறுப்புகள் நன்றாக வேலை செய்து உணவு ஜீரணிக்க உதவுகிறது. இந்தச் சிரிப்பினால் சுவாசம் அடிவயிற்றிலிருந்து எழும்புகிறது. இறுகிய தசைகள் சிரிப்பினால் தளர்கின்றன. இது ஒரு சிறந்த இறுக்க நிவாரணியாகும்.


முகத்தின் தசைகளைச் சிரிப்பு தளரச் செய்கிறது. முகத்தைச் சுளிப்பதற்கு உபயோகிக்கும் தசைகளை (72) விடச் சிரிப்பதற்கு ஒரு சில தசைகளையே (14) நாம் உபயோகிக்கிறோம். இறுக்கத்தினால் நமக்கு ஏற்படும் தலைவலியைக் கூட மருத்துவர்கள் நம்மைச் சிரிக்கச் சொல்லி குணப்படுத்திவிடுகிறார். தசை வீக்கங்கள், இரணம், புண், கட்டி முதலியவைகள் குணமடையச் சிரிப்பு உதவி செய்வதை மருத்துவச் சோதனையில் கண்டு பிடித்திருக்கிறார்கள். சிரிப்பும், நகைச்சுவையும் வலியைப் போக்குவது எப்படியென்றால் அவை நம்முடைய கவனத்தை வலியுள்ள இடத்தை விட்டுத் திருப்புவதனாலாகும்.

வலியுள்ள இடங்களில் தசைகளின் இறுக்கம் ஏற்படுகிறது. அந்த இடத்தில் நம்முடைய கவனம் அதிகரிக்க, அதிகரிக்க அங்குள்ள தசைகள் மேலும், மேலும் இறுகி, வலியும் அதிகரிக்கின்றது. நம்முடைய கவனத்தை வலியுள்ள இடத்திலிருந்தும் குறைக்கும் போது, தசைகள் தளர்வதினால், வலியிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது. நார்மன் கசின்ஸ் Saturday Review என்ற பத்திரிக்கையின் பதிப்பாசிரியர். ''வியாதிகளின் உடற்கூறு'' என்ற அவருடைய புத்தகத்தில், அவருக்கு வந்த இரத்தசம்பந்தமான, கொடூரமான வியாதியினால் ஏற்பட்ட உடல் வலியைச்சிரிப்பின் மூலமாகக் குறைத்து, அந்தத் தீராத வியாதிக்கு எப்படி நிவாரணம் கண்டார் என்பதை விளக்கியுள்ளார். மருத்துவமனைக்குச்சில கோமாளிகள் சென்று அங்கு வியாதியுள்ள குழந்தைகள், பேசாது மௌனம் சாதிப்பவர்கள், இவர்களின் வியாதியைப் போக்க உதவி யிருக்கிறார்கள். வியாதியைக் குணப்படுத்தும் குணம் நகைச்சுவையில் இருக்கிறது.

## துப்பாக்கி துளைத்தது

ஒருவரின் சுயமதிப்பை உயர்த்தவும், கர்வம் அடைந்த மனத்தைச் சமமாக்கவும் நகைச்சுவை ஒரு சிறந்த கருவியாகிறது. முகம் அல்லது உடல் ஊனம் (குறை, விகாரம்) உள்ள ஒருவர் வேறு ஒருவரைச் சந்திக்கும் போது அவருக்கு ஏற்படும் அதிர்ச்சியை, நகைச்சுவை மூலம் சமாளிக்கிறார்கள். சிரிக்கும் பொழுது அவர்களுடைய குறையை மற்றவர்கள் மறந்து விடுகிறார்கள். ஒன்றரைக்கண் வாத்தியார், மாணவர்களின் திசையைத் திருப்பி, நீதிபதியின் கதையைச் சொன்னார். ஒன்றரைக் கண் நீதிபதி கூண்டிலுள்ள 3 குற்றவாளிகளில் முதலாமவனைக் கேட்க, இரண்டாமவன் பதில் கூறினான். இரண்டாமவனிடம் ''நான் உன்னிடம் கேட்கவில்லை, ஏன் பேசுகிறாய்?'' என்று மூன்றாமவன் கேட்க ''நான் பேசவில்லை'' என்றான். இதைக் கேட்ட மாணவர்கள் வாத்தியாரின் ஊனத்தை மறந்து சகஜமாகப் பழக ஆரம்பித்தார்கள்.

அமெரிக்காவில் இந்தியனின் காதுகளில் தோடுகளுக்குப் போட்ட துவாரங்களைப் பற்றிக்



கேட்க, அவன், தான் சண்டை போடும் பொழுது, சகமாணவன் துப்பாக்கியால் சுட்டு அந்த துவாரத்தை ஏற்படுத்திவிட்டான் என்று சொன்னான். நகைச்சுவை காதின் மேல் கவனம் விழாமல் திசையைத் திருப்பியது. சிரிப்பின் மூலம் தங்களையும், குறையுள்ள ஊனமுள்ள மனிதர்களாக ஏற்றுக்கொண்டு, தங்கள் குறைகளைச் சிரித்து மழுப்பிவிடுகிறார்கள். இதனால் அவர்களுடைய சுயமதிப்பு பக்குவமாக இருக்கிறது. அரசர்களால் நியமிக்கப் பட்ட அரசவைக் கோமாளிகள் (விகடகவி) அரசரிடம் ஏற்படக்கூடிய கர்வத்தை நீக்கி, நடுநிலைக்குக் கொண்டு வர உதவினார்கள். அவர்களின் நகைச்சுவை, ஆட்சியில் உள்ளவர் களுக்குப் பிரச்சனைகளினால் ஏற்படும் இறுக்கங் களிலிருந்து நிவாரணம் காணப்பெரிதும் உதவின.

### சிறந்த வடிகால்

மனிதர்களின் உணர்ச்சிகளுக்கு நகைச்சுவை தலைசிறந்த வடிகாலை ஏற்படுத்துகிறது. சிரிப்பின் மூலம் தங்களின் கோபம், வருத்தம், கவலை போன்றவைகளை நீக்கி நடுநிலைக்கு வருகிறார்கள். தாங்கள் வெறுக்கும் நபர்களைக் கேலிச்சித்திரம் வரைந்து அந்த வெறுப்பை வெளிப்படுத்துகிறார்கள். அதிகாரிகளின் மேல் தொழிலாளிகள் வைத்திருக்கும் கோபத்தை கழிவறையில் அதிகாரிகளைப் பற்றி நகைச்சுவையாகப் பேசியும், சுவர்களில் எழுதியும் தங்கள் கோபத்தை வெளியிடு கிறார்கள். மாணவர்களும் தங்கள் ஆசிரியர்களின் மேல் உள்ள கோபத்திலிருந்து விடுபட இதுபோல் செய்கின்றார்கள்.


**... சிரிப்பின் மூலம் தங்களின் கோபம், வருத்தம், கவலை போன்றவைகளை நீக்கி நடுநிலைக்கு வருகிறார்கள்...**

ஆட்சியில் உள்ளவர்கள் 'சில சௌகரியங் களைச் செய்வேன்' என்று உறுதி கூறிவிட்டுப் பிறகு செய்யாமல் விடும்போது மக்களுக்கு அவர்கள் மேல் இருக்கும் கோபத்தைக் குறைக்கக் கேலிச்சித்திரக்காரரின் சித்திரங்கள் குடிமக்களின் கோபத்துக்கு வடிகாலாக அமைகின்றன. அதிகக் கோபமாக இருக்கும்போது ஒரு நகைச்சுவை நாடகம் பார்ப்பது நல்லது. தங்களுக்குள்ள கவலை, பயம் முதலியவைகளை மிகைப் படுத்தி நடித்துத் தம்மையே முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் பொழுது ஏற்படும் சிரிப்பு அந்த பயத்தில் இருந்து விடுபட வாய்ப்புக் கொடுக்கிறது. கவலை என்ற தடுப்புச் சுவரை, நகைச்சுவை உடைத் தெறியும், மிதமிஞ்சிய கோபம், பயம், குற்ற உணர்வு போன்ற உணர்ச்சிகளுக்குச் சிரிப்பு ஒரு சிறந்த வடிகால்.

கண்ணதாசனும் அவருடைய குழுவும் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனைப் பார்க்கச் செல்லும் பொழுது, சிறிது தாமதமாகச் சென்றார்கள். ஜனாதிபதி என்ன சொல்வாரோ என்று பயந்தார்கள். அவரோ,

''வாங்க, வாங்க லவண்டீங்களா, இந்த வாத்தியார் சட்டாம்பிள்ளையைப் பார்க்க வந்திங்களா?''

என்று நகைச்சுவையுடன் ஒரு பாட்டைச் சொல்லி அவர்களை வரவேற்றாராம்.



கண்ணதாசன் பதிலுக்கு ஒரு கவிதை சொன்னாராம்.

''பிறக்கும் போதும் அழுகின்றாய்,
இறக்கும் போதும் அழுகின்றாய்;
ஒரு நாளேனும் கவலையில்லாமல்
சிரிக்க மறந்தாய் மானிடனே!''

இதனால் எல்லோரும் சிரித்து, பயத்தை மறந்து வந்த காரியத்தை எளிதில் முடித்துக் கொண்டார்கள்.

தீர்வு காணமுடியாத பிரச்சினைகள் மனத்திலும், உடலிலும் தேங்கி இறுக்கத்தை ஏற்படுத்துகின்றன. நாம் சந்திக்கும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண இயலாது. நம்மால் தீர்வு காண முடியாத பிரச்சினைகளைச் சமாளிக்க சில வழிகள் தேவை. அவற்றுள் ஒன்று தினந்தோறும் தியானம், யோகாசனம் போன்ற ஆன்மீக வழிகளில் மனதை ஈடுபடுத்தி ஒருமுகப்படுத்துவது, மற்றொன்று மனதுக்கு அமைதி தரும் சுற்றுலாத் தலங்களுக்கு மற்றும் தொலைதூரங்களுக்கு செல்வது. அல்லது குடும்பத துடன், குழந்தைகளுடன் மனம் விட்டு பேசி மகிழ்வது மூலம் மனத்திலுள்ள சுமையாக விளங்கும் கலைந்தறியலாம்.

**... ஒருநாளில் ஒருமுறையேனும் வயிறு குலுங்கச்சிரித்தால் மருந்துவரிடம் போகவே தேவையில்லை...**


*1973*-ல், திடீரென்று பெட்ரோல் எண்ணெய் விலை அரேபியாவில் இரட்டிப்பு ஆகிவிட்டது. ஆதலால், நம் நாட்டிலும், விலைகள் அதிகரித்து விட்டன. ஆட்சியிலிருந்த இந்திரா காந்தியோ, கலைஞரோ, எதுவும் செய்ய முடியாத நிலை. மக்கள் இந்தப் பிரச்சினையைத் தாங்கிக் கொள்ள, ஒரு கேலிச் சித்திரம் உதவியது. ஒரு சாதாரண மனிதன் மேலே பறக்கும் இறக்கை பொருந்திய மண்ணெண்ணெய் - டின்னை பிடிக்க முயலுகிறான். ஆனால் அது எட்டவில்லை. இந்த விலைவாசி உயர்வு பிரச்சினையைத் தாங்கிக் கொள்ள இந்தக் கேலிச் சித்திரம் பயன்பட்டது.

### நகைச்சுவையின் பயன்

பிரச்சினைகளைக் கோமாளித்தனமாகப் பார்த்துப் பேசிச் சிரிப்பின் மூலம் அதன் சுமையைக் குறைக்கலாம். தீர்வு காண முடியாத பிரச்சினைகளால் குவிந்துள்ள இறுக்கங் களுக்குச் சிரிப்பு பாதுகாப்பான வடிகாலை ஏற்படுத்துகிறது. ஒருவரின் பிரச்சினைகளுக்குக் கேலியான தோற்றத்தை ஏற்படுத்தி, அதன் கடினத்தைக் குறைக்க உதவுகிறது. உலகிலிருந்து பின்வாங்கி மௌனநிலையில் உள்ள பலரை மீண்டும் சகஜமான வாழ்க்கைக்குக் கோமாளிகள் அழைத்து வந்திருக்கிறார்கள். எப்படியென்றால் நகைச்சுவை யின் மூலம் பின்வாங்கிய நிலை யில் உள்ளவர்களையும் பங் கெடுக்கவைத்துள்ளார்கள். உதவி யற்ற குழந்தைகளின் நிலையில் பின்வாங்கியவர்கள் இருக் கிறார்கள்.

நகைச்சுவை என்பது விளையாட்டாகப் பின்வாங்குவது ஆகும். இந்த நிலையில் இருக்கும் பொழுது, சமூகக் கட்டுப்பாடுகளைத் தூக்கியெறிந்து, சுதந்திரமான விளையாட்டில் மகிழ்ச்சியடைகிறார்கள். நகைச்சுவையின் பயனாக, சுவாசம் சுதந்திரமாகவும், சீராகவும் அமைவதுடன் ஆரோக்கியத்தையும் அதிகரிக் கிறது.





குடும்ப, சமூக உறவுகளை அதிகரிக்கச் சிரிப்பு தலைசிறந்த கருவியாகும். ஒரு குடும்பமோ அல்லது குழுவோ மாலையில் தங்கள் பேச்சு வார்த்தையைச் சிரிப்புடன் தொடங்கினால் அந்த மாலை அமைதியானதாக அமையும். குடும்ப நபர்களோ அல்லது குழு நபர்களோ தங்கள் பிரச்சினைகளையும், பயம் போன்ற உணர்ச்சிகளையும் வெளிப்படையாக விவாதிக்க இந்தப் பழக்கம் உதவும். திறந்த சூழ்நிலையை உருவாக்கும். இந்தச் சூழ்நிலை தடையற்றதாகவும், வெளிப்படையாகவும் இருக்கும். அதனால் பங்கேற்பவர்களுக்குத் தடையற்ற சுதந்திரமான சுவாசத்தைக் கொடுக் கும். தடையற்ற சுவாசம் ஆரோக்கியத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும். ஒரு குழுவோ அல்லது குடும்பமோசந்திக்கும் பிரச்சினைகளை நகைச்சுவையை உபயோகப்படுத்தித் தடை யின்றிப் பேசி, அலசி, ஆராய்ந்து பிரச்சினை களுக்கு நல்ல விதமாகத் தீர்வு காண முடியும்.

குடும்பம் அல்லது குழுவில் அந்நியோன் யத்தை ஏற்படுத்தச் சிரிப்பு உதவுகிறது. ஒரு குழுவோ அல்லது குடும்பமோ சிக்கலான பிரச்சினைகளைச்சமாளிக்கும் போது ஒத்துழைக் கும் மனப்பான்மையை நகைச்சுவை உண்டு பண்ணிநாள்தோறும் உண்டாகும் சுமை, சோர்வு இவைகளை நீக்குகிறது. சமூகத்தில் ஏற்படும் இறுக்கத்தைக் குறைக்க எண்ணெய் அல்லது பசையாக உதவுகிறது. இது சமூகத்தில் அல்லது குடும்பத்தில் உள்ள தடுப்புச் சுவர்களை உடைத்துச் சம உணர்வை ஏற்படுத்துகிறது.

**தீர்வுகாண முடியாத பிரச்சினைகளால் குவிந்துள்ள இறுக்கங்களுக்குச் சிரிப்பு பாதுகாப்பான வடிகாலை ஏற்படுத்துகிறது.**

## குடும்பமும் சமூகமும்

சிரிப்பு ஆயுளை அதிகரிக்கிறது. சீராகச்சுவாசிப்பவர்கள், கவலைகளி னாலும், பிரச்சினைகளினாலும் குன்றிவிட மாட்டார்கள். அலுவலகத்தில் ஏற்படும் உணர்ச்சிகளையும் எளிதான முறையில் ஏற்றுக் கொண்டு நல்ல விதமாக அதனைச் சமாளிப்பர். சிறந்த நோக்குடன் அணுக முடிகிறது. இறுக்கத்தைக் குறைக்கும் பசையாக நகைச் சுவையை உபயோகித்து எப்பொழுதும் சிரித்துக் கொண்டு இருப்பவர் நெருங்கிய உறவை ஏற்படுத்தி ஒரு சந்தோஷமான, ஆரோக்கியமான வாழ்க்கை யைக் குடும்பத்திலும், சமூகத்திலும் அமைத்துக் கொள்கிறார்.

மனநிலையைப் பலப்படுத்தவும், வாழ வேண்டும் என்ற விருப்பத்தை அதிகரிக்கவும் சிரிப்பு உதவுகிறது. இது சுயேச்சையையும், சுயமதிப்பையும் அளிக்கிறது. மனிநிலையை உறுதிப்படுத்தி, மனத்தைத் தகர்க்க முடியாத கோட்டையாகச் செய்கிறது. உண்மை என்ற அம்புகள் அல்லது கட்டாயப்படுத்துவதினால் ஏற்படும் மனக்காயங்களை, மனம், நகைச்சுவை உதவியுடன் ஏற்றுக் கொள்ள மறுக்கும். வெளி உலகினால் ஏற்படும் காயங்களை மனத்தில் நுழைய முடியாததாகச் செய்கிறது. இம்மாதிரி சூழ்நிலைகளில் மனம் காயம் படத்தக்க நிகழ்ச்சிகளைச் சிரிப்பின் மூலம் மகிழ்ச்சி யானவைகளாக ஏற்றுக்கொண்டு பக்குவம் அடைய முடியும். இவ்வாறாக நகைச்சுவை மனநிலையைப் பலப் படுத்துவதுடன், வாழ வேண்டும் என்ற உறுதியையும் அளிக்கிறது.

ஒரு கல்லூரி ஆசிரியை ஆண்டு இறுதியில் தன்னைப் பற்றிய மதிப்பீட்டை மாணவிகளை எழுதச்சொன்னார். கையெழுத்துப் போட வேண்டாம் என்றும் சொன்னார். ஒரு மாணவி


(ஆசிரியையை) முட்டாள் என்று எழுதிக் கொடுத்தாள். ஆசிரியையோ, அதன் திசையைத் திருப்பி ''நான்தான் கையெழுத்துப் போட வேண்டாம் என்று சொன்னேனே, எவள் முட்டாள் என்று கையெழுத்துப் போட்டு கொடுத்திருக்கிறாள்?'' என்று சொல்லி அதை எழுதிய மாணவியையே முட்டாள் ஆக்கி விட்டார்.

நகரத்தில், சாலை சந்திப்பில் பச்சை விளக்கிற்காக ஒரு வயதான கார் டிரைவர், காத்துக்கொண்டு இருந்தார். காருக்குப் பின்னால் ஒரு இளைஞர், மோட்டார் சைக்கிளில் இருந்தார். பச்சை விளக்கு வந்ததும், காரை ஸ்டார்ட் செய்ய முடியாமல் திணறினார். பொறுமை இல்லாத இளைஞரோ, முதியவரை, ''மடையா, காரை ஒழுங்காக வைத்துக் கொள்ளக் கூடாதா?'' என்று திட்டினான். அந்த முதியவரோ, சிறிதும் சலனமின்றி, ''மன்னித்து விடுங்கள் அண்ணாச்சி'' என்று சொன்னார். இவ்வாறு சொல்லும் பொழுது, இளைஞனை தன்னுடைய ''ஜாதிக்கு'' இழுத்துக் கொள்கிறார். தங்கள் மேல் பாயும் அம்பை, திசை திருப்பி, தாங்கள் புண்படாமல், பார்த்துக் கொள்கின்றனர். சுயமதிப்பு அதிகம் உள்ளவர்கள் மற்றவர்களின் இழிவான பேச்சுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். நகைச்சுவை தன்னுடைய சுயமதிப்பைப் பாதுகாத்து நடுநிலை அடைய உதவுகிறது.

**... மனநிலையைப் பலப்படுத்தவும், வாழவேண்டும் என்ற விருப்பத்தை அதிகரிக்கவும் சிரிப்பு உதவுகிறது...**

## செலவில்லா மருத்துவம்

சுருங்கச் சொன்னால், நகைச் சுவைக்குக் குணப்படுத்தும் தன்மை உண்டு. கசப்பு உணர்ச்சிகள், பிரச்சினைகளால் ஏற்படும் சுமைகளைக் குறைத்துச் சுதந்திரமான சுவாசம் விட உதவுகிறது. ஒருவரின் சுயமதிப்பிற்கு எதிராக ஏற்படும் தாக்குதல்களிலிருந்து அவர்களைப் பாதுகாத்து நகைச்சுவை ஒரு கவசமாக



இருந்து அவருடைய சுய மதிப்பை நிலைநாட்ட உதவுகிறது. இவ்வாறு செய்வதனால் வாழ வேண்டும் என்ற உறுதி அதிகரிக்கிறது. நகைச்சுவையானது கடவுளால் மனிதனுக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய சொத்து. பிரச்சினைகளைச் சிறந்த முறையில் அணுகவும், சுய ஆரோக்கியம், குடும்ப, நிறுவன, சமூக உறவுகளையும் ஆரோக்கியத்தையும் வளர்க்க நகைச்சுவை சிறந்த முறையில் உதவுகிறது. இதற்குச் செலவு இல்லை. செலவின்றி உடலை, மனதை நலமாக வைத்துக் கொள்ள சிரிப்பு சிறந்த கருவி.

ஓர் ஆலோசனை : சில நிறுவனங்களில் இன்றைய பொன்மொழி என்று தினம் ஒரு புதிய பொன்மொழி எழுதி வைக்கிறார்கள். தினமும் ஒரு நகைச்சுவை, கேலிச்சித்திரம் எழுதி வைக்கலாம். சில வங்கிக் கிளைகளில், வேலை ஆரம்பிப்பதற்கு முன், குழுவாக நகைச் சுவையைப் பகிர்ந்து கொள்கிறார்கள். வேலைக்கு வரும் பொழுது இருக்கும் இறுக்கங்கள் நீங்கி, வாடிக்கையாளர்களுடன் சுமுகமாகப் பழகி நல்லுறவை வளர்க்க இந்தப் பழக்கம் உதவுகிறது.

பஸ் கண்டக்டர்களும் தங்கள் தினசரிவேலையை ஆரம்பிக்குமுன் நகைச்சுவையுடன் வேலையில் ஈடுபட்டால், பயணிகளிடம் உறவு நன்றாக இருக்கும். அவர்களிடம் ஏற்படும் சிக்கல்களை, சண்டை சச்சரவுகள் வராமல் எளிதில் சமாளிக்க உதவும்.

வாய்விட்டுச்சிரியுங்கள்நோய் விட்டுப் போகும்!''

## எங்கேயோ கேட்ட குரல்!

திரு. திருநாவுக்கரசு (அ.இ.அ.தி.மு.க) பொருளாதாரப் பிரிவு, சமூக நலப்பிரிவு, மானியங்கள், பொதுப் பணிகள் என்ற நான்கில் முதல் மூன்று வகையும் பொது மக்களுக்குச் சென்று சேரக்கூடியது. அதற்கு அதிக செலவு செய்தால் அது பொதுமக்களைச் சென்றடையும். ஆனால், அந்த மூன்று இனத்துக்குத் தருவதைக்காட்டிலும் நான்காவது இனமான பொதுப்பணிக்கு நீங்கள் அதிகம் ஒதுக்கீடு செய்துள்ளீர்கள். அரசு ஊழியர்களைக் காட்டிலும் பொது மக்கள் நலனில் சற்று அக்கரை காட்ட வேண்டும்.

முதல்வர் கலைஞர் : எந்த வளர்ச்சிப் பணியானாலும்

### பேரவையில் நகைச்சுவை

திட்டப் பணிகள் ஆனாலும், அவைகளுக்கு அஸ்திவாரம் அரசு ஊழியர்கள்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆடம்பரச் செலவு, ஊதாரிச் செலவுகள் அல்ல இவைகள்.

திரு. திருநாவுக்கரசு: பொதுப்பணிக்கு என்று மட்டும் மூன்றில் ஒரு பங்கு செலவு, செலவீனத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதால் அது பொதுமக்களுக்குச் சுமையாக இருக்கிறது.

முதல்வர் கலைஞர் : இதற்கே இப்படிச் சொல்கிறீர்கள், ஊதியக் குழுவின் பரிந்துரைகள் வந்தால் இன்னும் சுமை கூடத்தான் செய்யும்.

திரு. திருநாவுக்கரசு : அப்படியானால் மக்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்!

முதல்வர் கலைஞர் : இது எங்கேயோ கேட்ட குரலாக . இருக்கிறதே!

(அவையில் பலத்த சிரிப்பு)



தமிழரசு கவிதைப் போட்டி
இரண்டாம் பரிசுக் கவிதை

# இன்று புதிதாய்ப் பிறந்தோம்

தீயபல எண்ணத்தை
தீக்குச்சி தின்றுவிட
கொடுத்துவிட்டால் இன்பங்கள் பொங்கும்! – அதைத்
தடுத்துவிட்டால் துன்பங்கள் தங்கும்!


ஏழையெல்லாம் ஏற்றம்பெற
ஏணியெனப் பெரியோர்கள்
இருந்தாலே இவ்வையம் வாழும்! – ஏழை
வருந்திட்டால் இவ்வையம் வீழும்!

கன்னலெனத் தானினிக்க
கன்னித்தமிழ் வளர்த்திடவே
தலைகொடுத்தும் போராடும் போது! – விடு
தலைகிடைக்கும் நமக்குத்தப் பாது!

ஒற்றுமையாய் நாமிருந்தால்
ஒருதுன்பம் நமக்கில்லை
என்றுபாடி தினந்தோறும் மகிழ்வோம்! – அதற்குத்
தானின்று நாம் புதிதாய்ப் பிறந்தோம்!

**மா.ந. சொக்கலிங்கம்**
2/7, காமராசர் வீதி,
வங்கனூர் - 631 304
செங்கை - எம்.ஜி.ஆர்.
மாவட்டம்.

இக் கவிதை ரூ. 100/- பரிசு பெறுகிறது



# பட்டிக்காட்டுப் பையன் பள்ளி செல்கிறான்



பட்டிக்காட்டில் இருக்கும் சிறுவனுக்கு எட்டு அல்லது ஒன்பது வயது ஆகிவிடுமானால் அவன், பெரியவர்கள் எவ்வளவு உபயோகமாக இருக்கிறார்களோ அதில் பாதிக்குப் பாதியாவது பயனுள்ளவனாக ஆகிவிடுகிறான். வசந்த காலத்தில் அவனால் களையெடுக்க முடியும்; அல்லது வெயில் காலத்தில் அறுவடை செய்தவைகளைக் கட்டாகக் கட்ட முடியும். வீடு கட்டும்போது அவனால் செங்கல் கொண்டு செல்ல முடியும். அல்லது நீர்ப்பாசன வசதிக்காக நீரைத் திறந்து விடவும், மூடவும் முடியும். இப்படி இருக்கும் போது அவனைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்ப யார்தான் விரும்புவார்கள்? ஆனால் நகரத்தில் ஒரு அரசாங்க அறிக்கை கொடுக்கப்பட்டிருந்தது; ஆறு வயதிற்கு மேற்பட்ட ஒரு பையனைப் பள்ளிக்கு அனுப்பாவிட்டால் அவன் குடும்பத்தில் பெரியவர் ஒருவர் சிறையிலிடப்படுவார் என்பதுதான் அது. இப்படித்தான் நமது கதையின் பட்டிகாட்டுச் சிறுவன் பள்ளிக் கூடத்திற்குச் சென்றான்.

முதல்நாள் அன்று பையன் எட்டுப் புத்தகங்களுடன் திரும்பி வந்தான். அவனது தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா ஆகிய அனைவரும் அவனைச் சூழ்ந்து நின்று புத்தகத்திலிருந்த படங்களை வேடிக்கை பார்த்தனர். தாத்தா சொன்னார் ''நமது நான்கு நூல்களும், ஐந்து காவியங்களும் இது போன்ற படங்களைக் கொண்டிருந்ததே இல்லை.''

''நூல் நூற்கும் இந்தப் பெண்மணிகூட ஒரு வெளிநாட்டுக்காரிதான். நூல் நூற்பதற்கு நாம் நமது வலது கையைப் பயன்படுத்துகிறோம். ஆனால் இவள் தனது இடது கையைப் பயன்படுத்துகிறாள்.''

''இது அவளை ஒரு வெளிநாட்டுக்காரியாகக் காட்டும் என்றால் இந்த வண்டிக்காரனும் தான் சீனாவைச் சேர்ந்தவன் அல்ல. எந்த சீன வண்டிக்காரனாவது தனது வண்டிக்குப் பக்கத்தில் இவ்வாறு நின்றிருப்பதை நீ பார்த்திருக்கிறாயா?'' தாத்தா விமர்சித்தார்.

''இந்த நூல்கள் ஒரு டாலரும் இருபது சென்ட் விலையும் கொண்டவை என்று எனது ஆசிரியை சொன்னார்கள்'' அவர்கள் நூல்களின் மீது காட்டிய ஆர்வத்தினால் உற்சாகமடைந்தவனாகப் பையன் உடனே சொன்னான். திடீரென்று இடி இடித்தது போன்று எல்லோரும் திகைத்துப் போனார்கள்.

பாட்டிதான் முதலில் பேசினாள்: ''பையனை பள்ளிக்கு அனுப்பியதற்காக இந்த நூல்களின் விலையை நம்மைக் கொடுக்கச் சொல்லும் தைரியம் அவர்களுக்கு உண்டுதான். ஒருநாள் கூட முழுதாக இவன் பள்ளிக்குப் போகவில்லை. அதற்குள்ளாகவே ஒரு டாலர் செலவு வந்துவிட்டது. இது போன்ற பள்ளிகளுக்கு அனுப்ப யாரிடம்தான் பணம் இருக்கிறது? ஓர் அரை ஆண்டு முழுவதும் விளக்கு ஏற்றாமல் மிச்சம் பிடித்தால் கூட இந்தப் பணத்தை நம்மால் சேர்க்க முடியாது. இவ்வளவு பணம் திரட்டுவதற்கு நாம் குறைந்த பட்சம் எட்டுப் படி சோளமாவது விற்றாக வேண்டும்.''

**இக்கதை திரு. இந்திரன் அவர்களால் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு தொகுத்து வெளியிடப்பட்ட பசித்த தலைமுறை எனும் மூன்றாம் உலகக் கலை இலக்கியத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள லாவ் ஹ்சியாங் எனும் சீனக்கதையின் தமிழாக்கமாகும். மூன்றாம் உலக எழுத்துக்கள் அனைத்தும் மனித நேயம் மிக்கவை. அதனால்தான் இவை தங்களது உள் உலகங்களைச் சக மனிதனான தமிழனுடன் பகிர்ந்துகொள்ளத் தயாராக உள்ளன. சீனச் சிறுகதையாக இருந்தாலும் இது எல்லாத் தேசங்களுக்கும் நேசமுடையதுதான்.**

''முதலில் தொடங்குவதற்கு ஒரு புத்தகம் போதுமென்று நான் நினைக்கிறேன். அதை முடித்த பிறகு அடுத்த புத்தகம் வாங்கிக் கொள்ளலாம்.'' தாத்தா சொன்னார்.

''அது மட்டுமல்ல. ஒரு பக்கத்தில் மூன்று அல்லது நான்கு எழுத்து மட்டுமே இருக்கும்போது அவர்கள் ஏன் அவ்வளவு விலை வைக்க வேண்டும்?'' பாட்டி தொடர்ந்தாள்! ''அரிச்சுவடியில் சிறிய, பெரிய எழுத்துக்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் அது ஐந்து பித்தளைக் காசுகள்தான். இது எப்படி ஒரு டாலருக்கு மேல் விற்கிறது?''

சில நிமிடங்களுக்கு முன்னர் அவர்கள் வியந்து பாராட்டிய அதே புத்தகம் இப்போது அவர்களது சோகத்துக்குக் காரணமாகிவிட்டது. இந்த குடும்பம். சாப்பாட்டு நேரம், மாலையின் பிற்பகுதி முழுவதும் இந்தக் குழப்பத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்துவிட்டு, இறுதியாக இதுவே முதல்தடவை என்பதால், இதை ஒத்துக்கொண்டு தேவைப்பட்ட பணத்தைக் கொடுத்துவிட முடிவு செய்தது.

இந்தப் பணத்தைச் சரி செய்ய, சிறுவனின் அம்மா அண்மையில் விற்ற கம்மலின் பணத்தைக் கொடுத்துவிட வேண்டும். அப்பா ஒரு புனிதமான சொற்பொழிவாற்றினார்: ''உனக்கு இப்போது ஒன்பது வயது ஆகிவிட்டது. இனியும் நீ சின்னப்பையன் அல்ல. உன்னை வேலை செய்யாமலிருக்கச் செய்கிறோம். எங்களால் சமாளிக்க முடியாவிட்டாலும் உன்னைப் பள்ளிக்கு அனுப்புகிறோம். எனவே நீ கடினமாகப் படித்து, ஏதாவது கற்றுக் கொள்ளாவிட்டால் நன்றி கெட்டவனாகிவிடுவாய்.''

மறுநாள் அதிகாலையில், சிறுவன் அப்பா சொன்னதை மனதில் ஏற்றிக்கொண்டு பள்ளிக்குச் சென்றான். அவன் அங்கு சென்றபோது, பள்ளி காவல்காரர் மெதுவாகச் சொன்னார்.

''வகுப்பு ஒன்பது மணி வரை தொடங்காது. இப்போது ஐந்தரை மணிதான் ஆகிறது.



**... நமது நான்கு நூல்களும், ஐந்து காவியங்களும் இதுபோன்ற படங்களைக் கொண்டிருந்ததே இல்லை...**

வகுப்பு ஆசிரியர் தூங்கிக் கொண்டிருப்பார். வகுப்புகள் இன்னமும் பூட்டியே உள்ளன. நீ இப்போது வீட்டுக்குத்திரும்பிப் போய்விடுவது நல்லது.'' சிறுவன் சுற்று முற்றும் பார்த்து தான்தான் அங்கிருக்கும் ஒரே ஒரு மாணவன் என்று புரிந்து கொண்டான். ஆசிரியரின் ஜன்னலருகே செவி மடுத்த போது ஆசிரியரின் குறட்டை ஒலி கேட்டது. வகுப்பு அறைகளைச் சுற்றிப் பார்த்த போது, அவை பூட்டிக் கிடந்ததைப் பார்த்தான். வீட்டிற்குத் திரும்பி ஓடுவது தவிர வேறு வழியில்லை. தாத்தா திடீரென்று பையனைப் பார்த்த போது அவர் தரையைப் பெருக்கிக் கொண்டு இருந்தார். துடைப்பத்தை வீசியெறிந்துவிட்டு அவர் சொன்னார்: ''மண் வெட்டிக்காக இறைவன் படைத்த பையனைப் படிக்க வைப்பதினால் என்ன பயன்? இரண்டாவது நாளிலேயே அவன் விளையாடிக் கொண்டிருக்கிறான்.'' பையன் விளக்கிச் சொல்லத் தொடங்கிய போது, அம்மா இரண்டு அறை கொடுத்து காலை உணவுக்காக அவனை அடுப்பு மூட்டச் சொல்லி விட்டாள். அவர்களது கோபத்திற்கு அந்தப் புத்தக விலையும் ஒரு காரணம்தான்.


அவன் காலை உணவை முடித்துவிட்டுப் பள்ளிக்கு மீண்டும் சென்றபோது ஆசிரியர் மேடையில் நின்று, காலம் தாழ்த்தாமல் பள்ளிக்கு வருவது பற்றி சொல்லிக் கொண்டிருந்தார். இதை விளக்குவதற்காக, ஒரு பை நிறைய தங்கத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு, முதன் முதலில் பள்ளிக்கு வரும் மாணவனுக்கு கொடுப்பதற்காக காத்திருந்த தேவதை ஒன்றைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். நமது பையன் 'தேவதை' 'பை நிறையத் தங்கம்'' போன்றவற்றினால் மகிழ்ச்சி அடைந்தாலும், 'முதல் முதலில் வரும்' எனும் சொற்கள் குறிப்பது என்னவென்று புரியாமல் இருந்தான். பிற்பகலில், நமது சிறிய கதாநாயகர், மூன்றரை மணி அளவில் அப்பா பகலில் ஒரு குட்டி தூக்கம் போட்டுவிட்டு மீண்டும் வேலைக்குப் போகும் போது வந்தார். அதிர்ஷ்டவசமாக, சிறுவனின் அப்பா, பிற சிறுவர்களும் பள்ளியிலிருந்து வருவதைப் பார்த்தார். மேலும் அவனது ஆசிரியர் தனது



பிரம்புடன் உலா வருகையில், பையன் விளையாடிக் கொண்டிருக்கவில்லை என்று முடிவாகச் சொன்னார். இந்த வெளிநாட்டுப் பள்ளிக்கூடங்கள் நடந்து கொள்ளும் விநோதமான வழிகள் என்னவென்றே அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

முதல் ஆறு நாட்கள், முதல் பாடத்தில் இருக்கும் 'இதுதான் அம்மா' எனும் வாக்கியத்துக்கே சரியாக இருந்தது. சிறுவன் ஊக்கமுள்ளவன் அல்ல என்று நாம் சொல்ல முடியாது. பள்ளிக்கூடம் முடிந்த பிறகு, சிறுவன் பாடங்களை மீண்டும் மீண்டும் இரவிலிருந்து காலை வரை தினந்தோறும் 'இதுதான் அம்மா' என்ற பாடத்தைப் படித்தான். இடது கையினால் புத்தகத்தைப் பிடித்தபடி வலது கை எழுத்துக் களைக் கூட்டிக் கொண்டு, அவன் மிகவும் உண்மை யோடும், மனசாட்சியோடும் படித்தான். அவன் அந்த எழுத்துக்களின் மீது முழு கவனத்தையும் செலுத்தி விட்டால், அவை பறந்து போய் விடுமோ என்று அஞ்சுவது போல படித்தான்.

ஒவ்வொரு முறையும் 'இதுதான் அம்மா' என்று அவன்



**... இதுபோன்ற பள்ளிகளுக்கு அனுப்ப யாரிடம்தான் பணம் இருக்கிறது? ஓர் அரையாண்டு முழுவதும் விளக்கு ஏற்றாமல் மிச்சம் பிடித்தால் கூட இந்தப் பணத்தை நம்மால் சேர்க்க முடியாது...**

படிக்கிற போதும் அவனது அம்மாவின் மனம் குதிக்கும். ஆறாவது நாள் அவளால் இந்த பாடத்தைச் சகிக்க முடியவில்லை. அந்தப் புத்தகத்தைப் பிடுங்கிக் கொண்டு அவள் சொன்னாள். ''உன்னுடைய அம்மா யார் என்று நான் பார்க்கிறேன்.'' அவனுடைய அம்மா உண்மையிலேயே அந்த பாடத்தைப் படிக்க ஆர்வத்துடன் இருக்கிறாள் என்று நினைத்துக்கொண்டு அவன், அந்தப் பாடத்தைத் தொடர்ந்து படத்தில் தோல் சப்பாத்து, வெட்டப்பட்ட முடி, நீளமான உடையுடன் இருந்த பெண்மணியை 'இதுதான் அம்மா'' என்று காண்பித்தான். அதை ஒரு கணம் பார்த்தவுடன் அம்மா கதறி அழத் தொடங்கினாள். தாத்தா, பாட்டி, அப்பா ஆகிய அனைவரும் அவளுக்கு ஏதோ பேய் பிடித்துவிட்டது என்று பயந்தனர். என்ன செய்தி என்று அவர்கள் விசாரித்தபோது அவளால் முதலில் ஒன்றுமே சொல்ல முடியவில்லை. அவர்கள் வற்புறுத்திக் கேட்டபோது அவள் சொன்னாள்: ''பையனுக்கு இந்த பரத்தையைப்

போன்ற அம்மா எங்கிருந்து கிடைத்தாள்.''

அவள் துயரத்தைக் கேள்விப்பட்ட பிறகு அப்பா சொன்னார். ''பையன் இது யாருடைய அம்மா என்று கேட்கட்டும். ஒருவேளை ஆசிரியரின் அம்மாவாக இருக்கலாம்.''

மறுநாள் அதிகாலையிலேயே பையனின் அம்மா அவனை எழுப்பி, பள்ளிக்குச் சென்று இரவு முழுவதும் தன்னைத் தொல்லைப்படுத்திய இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்று கேட்கச் செய்தாள். பள்ளிக்குச் சென்ற மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகையால் பள்ளிக்கூடம் கிடையாது. பையன் அம்மாவிடம் நிலைமையைச் சொன்ன போது, அவள் இந்த ஞாயிற்றுக் கிழமை பள்ளியை சபித்தாள்.

திங்கள்கிழமை, பொது வகுப்பில், ஆசிரியர் மெதுவாகச் சொன்னார்: ''கற்றுக் கொள்ள வேண்டும் எனும் ஆசை கொண்டவர்கள் வினாக்களை எழுப்பப் பயப்படக்கூடாது. எந்த வினா யாருக்கு எழுந்தாலும் அவர்கள் உடனே அதை வகுப்பு ஆசிரியரிடமோ அல்லது வீட்டில் பெற்றோரிடமோ கேட்டுவிட வேண்டும்.

நமது கதாநாயகர் உடனே எழுந்தார். ''பாட புத்தகத்தில் 'இதுதான் அம்மா' என்று போட்டு இருக்கிறது. உண்மையில் இது யாருடைய அம்மா?'' முன்பைவிட இப்போது மேலும் மெதுவாக ஆசிரியர் சொன்னார்: ''இந்தப் புத்தகத்தை யார்படிக்கிறார்களோ அவர்களது அம்மாதான் இது. இப்போது உனக்கு இது புரிகிறதா?''

''இல்லை.'' பையன் சொன்னான். இது ஆசிரியரைக் கொஞ்சம் சங்கடப்படுத்தியது. ஆனால் அவர் பொறுமையாகச் சொன்னார். ''நீ ஏன் புரிந்து கொள்ள மாட்டேனென்கிறாய்?''

''மொட்டையும் கூட இந்த புத்தகத்தைப் படிக்கிறான். ஆனால் அவன் அம்மா இந்த பெண்மணியைப் போல் இல்லை.'' என்று பையன் சொன்னான்.

''மொட்டையின் அம்மாவுக்கு ஒரு கை கிடையாது. மேலும் ஒரே ஒரு கண்தான்.'' ஹசியாவோலின் கூறினான்.



**... கற்றுக்கொள்ள வேண்டும் எனும் ஆசை கொண்டவர்கள் வினாக்களை எழுப்பப் பயப்படக் கூடாது...**

''எனக்கு அம்மாவே கிடையாது. அவள் எப்போதோ செத்துப்போய்விட்டாள்.'' மொட்டை பதிலுக்குச் சொன்னான்.

''உங்களுக்குள்ளாக பேசிக் கொள்ளாதீர்கள்.'' ஆசிரியர் கரும்பலகையின் மீது தட்டிக் கூறினார். ''இன்று நாம் இரண்டாம் பாடம் படிக்கப் போகிறோம்'' 'இதுதான் அப்பா' எல்லோரும்பாருங்கள். ''கண்ணாடி அணிந்து, வகிடெடுத்த தலைமுடி கொண்ட மனிதன்''

பள்ளி முடிந்த பிறகு, அது யாருடைய அம்மா என்று அறிந்துகொள்ள ஆசைப் பட்டாள் அம்மா. ஆனால் பையன் மீண்டும் 'இதுதான் அப்பா, எனும் பாடத்தைத் தொடங்கியதும், அவளது பையனுக்கு புதிய அப்பாவை அவள் எப்போது தேர்ந்தெடுத்தாள் என்று அப்பா கேட்பார் என்று அஞ்சி அந்த வினாவைத் தொடராமல் விட்டு விட்டாள். முன்னரே அப்பா, அம்மா கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு ஏன் இந்தப் பாடம் புதிய அப்பாக்களையும், அம்மாக்களையும் கொடுக்கிறது என்று குழம்பினாள்.

சிலநாள் கழித்து பையன் இன்னும் இரண்டு வாக்கியங்களைக் கற்றான். 'காளை நெருப்பைப் பார்த்துக் கொள்ளும். குதிரை சேமியா சாப்பிடும்' அவன் ஆயிரம் முறை படித்தாலும், அதில் ஏதோ குளறுபடி இருக்கிறது என்கிற எண்ணத்தை மாற்றிக் கொள்ளவே முடியவில்லை. அவர்களிடம் ஒரு காளையும், குதிரையும் உண்டு. அவற்றைப் புல் மேய்வதற்காக அவனே ஓட்டிச் சென்றிருக்கிறான். ஆனால் என்றைக்குமே ஒரு குதிரை சேமியா சாப்பிடுவதையோ, காளை நெருப்பைக் கவனித்துக் கொள்வதையோ அவன் கண்டதில்லை. ஆனால் பாடபுத்தகம் தவறாக இருக்க முடியுமா? இறுதியாக அவன் ஆசிரியர் ஒரு வாரத்திற்கு முன்னர் கொடுத்த அறிவுரைக்குப் பணிந்து, அப்பாவிடம் இதுபற்றிக் கேட்டான். அப்பா சொன்னார்: ''நகரத்தில் நான் ஒருமுறை வெளிநாட்டு சர்க்கஸ் ஒன்றுக்குச் சென்றேன். அதில்

மணியை அடிக்கக்கூடிய, துப்பாக்கி சுடக்கூடிய குதிரையைப் பார்த்து இருக்கிறேன். ஒரு வேளை இந்தப் புத்தகம் அதுபோன்ற குதிரை, காளை போன்றவை பற்றிப் பேசுகிறது போலும்.''



பாட்டி அப்பாவின் விளக்கத்தை ஒத்துக்கொள்ளவில்லை. அவள் சொன்னாள். ''அந்தக் காளை காளை முகம் கொண்ட அசுரனாக இருக்க வேண்டும். இவர்கள் அனைவரும் மனித உடை அணிவார்கள் என்று உனக்குத் தெரியாது? அவை இன்னமும் மனிததலையை மாற்றிக் கொள்ள வில்லை அதற்கு இன்னமும் ஐந்தாறு ஆண்டுகள் பிடிக்கும்,'' பிறகு பாட்டி, காற்றை அதிகாரம் செய்யும், மழையை நினைத்தால் வரவழைக்கும் அசுரர்களைப் பற்றிய கதைகளைச் சொல்லத் தொடங்கி விட்டாள். இதன்விளைவு பையன் இரவில் தன்னை ஒரு இறக்கை வைத்த ஓநாய்அசுரன்பிடித்துவிட்டதாகக் கனவு கண்டு அழுதான்.

மறுநாள் பையன் ஆசிரியரிடம்கேட்டான். ''நெருப்பைக் கவனித்துக் கொள்ளும் இந்தக் காளைவெளிநாட்டுக்காளையா?''

ஆசிரியர் சிரித்துவிட்டுச் சொன்னார். ''நீ எல்லாவற்றையும் அப்படியே எடுத்துக் கொள்கிறாய். காளைகள் உண்மையில் நெருப்பைக் கவனித்துக் கொள்ளும் என்பதோ, குதிரைகள் சேமியா தின்னும் என்பதோ உண்மை யல்ல. புத்தகம் அவற்றை வெறுமனே இட்டுக் கட்டி இருக்கிறது.

பையனை இதுவரை குழப்பிய பல விஷயங்கள்

ஒரேயடியாகப் பையனுக்குப் புரிந்துபோயிற்று. அவன் இதுவரையிலும் ரொட்டி பால், பூங்கா, பந்து போன்ற அவன் பாத்திராத பலவற்றைப் பற்றிப் படித்து வியந்து இருந்தான். இட்டுக்கட்டும் விஷயங்களைத் தான் இந்த புத்தகம் சொல்கிறது என்று அவனுக்குப் புரிந்து போயிற்று.

ஒருநாள் தேனீர் விருந்து எனும் தங்கள் புத்தகத்தில் படித்த விளையாட்டை விளையாடுவதாகப் பையனும், அவன் பள்ளி நண்பர்களும் முடிவு செய்தனர். ஒவ்வொருவரும் இருபது சென்ட் பணம் போட்டு நகரத்திலிருந்து, ஆரஞ்சு, ஆப்பிள், சாக்லேட் போன்றவற்றை வாங்க முடிவு செய்தனர். ஆனால் இதற்காகப் பணம் கேட்பது என்பது உதை வாங்கிக் கொடுக்கும் என்று நமது பையனுக்குத் தெரியும். எழுதுவதற்கு ஒரு காகிதம் வாங்கினால் கூட பள்ளிக்கூடம் தங்களைத் திவாலாக்கிவிடும் என்று பாட்டி அடிக்கடி கூறிவந்தாள். ஆனால் தேனீர் விருந்து பற்றி புத்தகம் கொடுத்திருந்த கற்பனையால் அம்மாவின் நகையை விற்று, முட்டைக் கோசு நாற்று வாங்க வைத்திருந்த பணத்தைப் பயன்படுத்த முடிவு செய்தான்.

தாத்தா நீண்ட நாளாக இருமலினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். ஆரஞ்சுப் பழத்தோல் இந்த இருமலை சரி செய்யும் என்று யாரோ சொல்லி இருந்தார்கள். எனவே அவரும் ஆரஞ்சுப் பழத்தோல் எப்படி இருக்கும் என்றும், எங்கே கிடைக்கும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தார். தாத்தாவுக்காக பரிந்து பேசுவதைப்போல தனக்கு உதவி தேடிக் கொள்ளலாம் என்று பையன் சொன்னான், '' நாங்கள் சில ஆரஞ்சுப் பழங்களை வாங்கப் போகிறோம்.''

ஆரஞ்சுப் பழத்தை எதற்காக வாங்குகிறீர்கள்?'' என்று கேட்டார் தாத்தா.

''நாங்கள் ஒரு தேனீர் விருந்து வைக்கப்போகிறோம்.'' பையன் சொன்னான்.

''தேனீர் விருந்து என்றால் என்ன?''



**... குதிரை சேமியா சாப்பிடுவதையோ காளை நெருப்பை கவனித்துக் கொள்வதையோ அவன் கண்டதில்லை ஆனால், பாட புத்தகம் தவறாக இருக்க முடியுமா-...**

''எல்லோரும் சேர்ந்து ஒன்றாகத் தின்பதும் தேனீர் அருந்துவதும் என்பதுதான் அதன் பொருள்'' பையன் சொன்னான். ''இது புத்தகத்தில் இருக்கிறது.''

''மிருகங்களைப் பேச வைப்பதும், மனிதர்களை சாப்பிடவும், தேனீர் குடிக்கவும் கற்றுக் கொடுக்கும் இது என்ன புத்தகம்?'' பையன்கள் பள்ளிக்குச் சென்றால் சோம்பேறிகளாகி விடுவதிலும், சாப்பிடுவதில் இதுதான் வேண்டும், அதுதான் வேண்டும் என்று கேட்பதிலும் ஆச்சரியமே இல்லை'' என்று சொன்னார் தாத்தா.

''இது எப்போதுமே வெளிநாட்டு உணவு பற்றித்தான் இருக்கிறது. சோளக் குழம்பு பற்றியோ, பீன்ஸ் தயிரில் வெங்காயம் போட்டுக் கொள்வது பற்றியோ இருப்பதே இல்லை.'' தாத்தா சொன்னார்.


''மகனே, தாத்தாவின் இருமலுக்கு ஆரஞ்சு பழத்தோல் கொண்டுவர மறந்துவிடாதே'' என்று சொன்னாள் அம்மா:

''ஆரஞ்சு வாங்க பணம் எங்கிருந்து வந்தது.'' என்று கேட்டார் அப்பா.

''அதுதான் அப்பா ஆசிரியர் வந்து...'' பையன் முடிப்பதற்குள், பக்கத்து வீட்டில் வசித்து வந்த மொட்டை திடீரென்று கதறி அழத் தொடங்கினான். அவனது அப்பா சத்தம் கேட்டது'' உப்பு வாங்கக்கூட முடியவில்லை. உனக்கு இனிப்பு வாங்க வேண்டுமா?''

ஹ்சியாஹலின்னின் மாமா மேற்குப் பக்கத்திலிருந்து கத்துவது கேட்டது.'' உனது நல்லதுக்காக நான் உழைத்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு புத்தகம் வாங்கித் தருகிறேன். ஆனால் இனிப்பு வாங்க என்னிடம் பணம் இல்லை. உன்னைத் தேனீர் விருந்து வைக்கச் சொல்பவர்களிடமே நீ அதைக் கேள்.''

உண்மை வெளிப்பட்டு விட்டது. பையனின் அப்பா ஒரு உதை கொடுத்தார். நல்ல வேளையாக ஒரு மேசை இடையில் குறுக்கிட்டது. இது மேசையை



ஆட்டிவிட்டு சில அரிசி பானைகளை உடைத்தது. தாத்தா பையனைப் பள்ளியிலிருந்து எடுத்துவிடுவது நல்லது என்று சொன்னார். ஆனால் பாட்டி தனது மகனைச்சிறைக்கு அனுப்பத் தயாராக இல்லை. நீண்ட விவாதங்களுக்குப் பிறகு, இன்னும் சில நாள் பையனைப் பள்ளிக்கு அனுப்ப முடிவாயிற்று.

இந்த கேவலத்துக்கு பிறகு, நமது இளம் படிப்பாளி மேலும் அதிகமாக படித்து, குடும்பத்தில் தான் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவதாக சபதம் ஏற்றார். தினமும் இருட்டும் வரை, நிறுத்தாமல் மேலும் நன்றாகப் படித்தான். ஆனால் அவனது தொல்லைகளின் இருப்பிடம் அவனது பாட புத்தகம் தான் என்பது அவனுக்குத் தெரியவில்லை.

பாட்டி, தனது மகன் திருமணத்திற்கு முன்னால் இருந்த அளவுக்கு இப்போது நெருக்கமாக இருப்பதில்லை என்றும், குடும்பத்தில் தனக்கு இருந்த முக்கியத்துவம் மெல்ல நழுவுவதாகவும் உணரத் தொடங்கினாள். இப்போது பையன் உரக்கப் படிப்பதை அவள் செவிமடுத்தாள். ''என் குடும்பத்தில் ஒரு அப்பா. ஒரு அம்மா, ஒரு சகோதரன், ஒரு சகோதரி ஆகியோர் உள்ளனர்.'' இதில் தாத்தா, பாட்டி பற்றி எதுவுமே இல்லை. அவள் மிகவும் கோபத்துடன் கத்தினாள். ''எனவே இந்த வீடு முழுவதும் உங்களுக்குத்தான் எனக்கு இடம் இல்லை'' அவள் கோபத்தில் ஒரு செங்கல்லை எடுத்து இரும்புப்பானையில்உடைத்தாள்.

''இனியும் நீங்கள் கோபப் படவேண்டாம்.'' பையனின் அப்பா சொன்னார். ''இது போன்ற புத்தகத்தை நாம் இனி மேல் அவனைப் படிக்கவிட வேண்டியதில்லை. பதிலாக நான் சிறைக்குச் செல்கிறேன்.

எனவே மறுநாள் அப்பா ஒரு பகல் வேலைக்காரனை விடுவித்தார். பள்ளியில் ஆசிரியர் பையன் வரவில்லை என்பதைத் தனது பதிவேட்டில் குறித்தார்.

நன்றி: பசித்த தலைமுறை
சிந்து பதிப்பக அறக்கட்டளை,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை -14

## ரப்பர் எதற்கு?

பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்ற நாள் அது. பள்ளிப் பிள்ளைகளுக்குப் பரிசுகள் வழங்க வேண்டும் என்று, கம்பெனியில் ஒருவரை அனுப்பி நோட்டு பென்சில் எல்லாம் வாங்கி வரச் சொன்னார். பெரிய பெட்டி நிறைய வந்திறங்கின. வாங்கி வந்தவர் பென்சில் அழிக்கும் ரப்பர் வாங்கிவர மறந்து விட்டார். இதை இவர் கவனிக்கவில்லை. காரில் ஏறி ஒவ்வொரு பள்ளிக் கூடமாகப்போய் பிள்ளைகளுக்கு நோட்டு பென்சிலை எடுத்தெடுத்துக் கொடுத்துக் கொண்டேயிருந்தார்.


ஒரு துருதுருப்பான பையன் கேட்டான். ''ரப்பர் இல்லையா எங்களுக்கு?'' என்று அதற்கு அவர் இனிமையாக இப்படிப் பதில் சொன்னார். ''காஞ்சிபுரம் வெற்றி பெற்றாச்சு, இனி கல்வி நல்லா வளரும், அதனாலே, பிள்ளைகள் யாருமே இனி தப்பு போட்டு எழுதமாட்டீங்க, தப்பு இல்லையின்னா, பிறகு ரப்பர் எதற்கு?'' என்று ஓர் இனிமையான பதிலைச் சொன்னார். பிள்ளைகள் மனம் குளிர்ந்தது.

**கலைவாணர் நினைவுகள்**




1. மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் தலைமையில் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழக மாநாட்டில் "முத்தமிழ் வித்தகர்" என்ற பட்டத்தைக் கவிஞர் வைரமுத்துக்கு மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் திரு மு.க. ஸ்டாலின், இயல் இசை நாடக மன்றச் செயலாளர், திரு சந்திரசேகர் உடன் உள்ளனர். (23.7.96)

2. அஞ்சுகம் மேல்நிலைப் பள்ளியின் முப்பெரும் விழாவில் ,அரசுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் பரிசுகள் வழங்கினார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி. மனோகரன் உடன் உள்ளார். (29.7.96)











3. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை மகாராட்டிர மாநில முன்னாள் ஆளுநர் திரு சி. சுப்ரமணியம் அவர்கள் சந்தித்தார். (2.8.96)

4. சென்னையில் அமைக்கப் பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை திருமதி ருக்மிணி லட்சுமிபதி அவர்களின் திருவுருவச் சிலையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். முன்னாள் ஆளுநர் திரு சி. சுப்ரமணியம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (6.8.96)











5. நாடாளுமன்றச் சபாநாயகர் திரு பி.ஏ. சங்மா அவர்கள், தமிழக சட்டப்பேரவைத் தலைவர் திரு பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு பரிதி இளம்வழுதி உடன் உள்ளார். (2.8.96)

6. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களைக் கடலோர காவல்படைத் தலைமை இயக்குநர் வைஸ் அட்மிரல் பி.ஜே. ஜேக்கப் சந்தித்துப் பேசினார். மாண்புமிகு முதல்வரின் செயலர் திரு டி.முருகராஜ், இ.ஆ.ப., உடன் உள்ளார். (2.8.96)


7. மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சேப்பாக்கம் தொகுதியில் உள்ள சத்தியவாணி முத்து நகரில் தீயினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு அப்பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறினார். (3.8.96)

# செய்திச்சரம்

சென்னைக்கு அருகே

## ஆப்டிக்கல் ஃபைபர் கேபிள்' திட்டம் தொடக்கம்


**த**மிழ்நாடு டெலிகம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் (டெலிகம்யூனிகேஷன்ஸ் கன்ஸல்டன்ட்ஸ் இந்தியா லிமிடெட்) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ஆகியவற்றால் வளர்ச்சியுறும் ஓர் நிறுவனம், 13.5.1988 அன்று, அமெரிக்காவைச் சேர்ந்த எஸெக்ஸ் க்ரூப் நிறுவனம் தந்த தொழில் நுட்பத்துடன் தொலைத்தொடர்புக்கான 'ஜெல்லி ஃபில்டு கேபிள்களைத் தயாரிக்க அரக்கோணம் அருகே தொழிற்சாலையைக்கொண்டு துவக்கப் பட்டது. டெலிகம்யூனிகே ஷன்ஸ் கன்ஸல்டன்ட்ஸ் இந்தியா லிமிடெட்டும் (26% பங்கும்) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (25%) சேர்ந்து 51% பங்கை உடையதாக உள்ளன; மீதி உள்ள 49% இந்திய மக்களுக்கு உரிய பங்காக உள்ளது. தமிழ்நாடு டெலிகம் யூனிகேஷன்ஸ் லிமிடெட், ஜெல்லி ஃபில்டு கேபிளைத் தயாரிக்க 6.25 LCKM திறத்துடன் வெற்றிகரமாக நிறுவி, தொடக் கக்காலத்தை வெற்றியுடன் செயல்படுத்தி 1993-94 முதல் இலாபகரமான செயல்பாடு களில் ஈடுபட்டு வருகிறது.



ஆப்டிகல் ஃபைபர் கேபிள் என்பது தொலை தொடர்புத் தேவைகளில் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருகின்ற ஒன்றாகும். தமது இயக்கத்தைப் பல்வகைப் படுத்தும் முகமாக தமிழ்நாடு டெலிகம் யூனிகேஷன்ஸ் லிமிடெட், ஆப்டிகல் ஃபைபர் கேபிள் தயாரிக்க இணைந்த செயல்பாட்டுக்காகவும் தொழில்நுட்ப மாற்றத்திற் காகவும் ஃப்யூஜிகுரா லிமிடெட் ஜப்பானுடன் இணைந்துள்ளது.

ஜப்பானில் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் தயாரிப்பாளர்களில் ஃப்யூஜிகுரா தலைசிறந்த தயாரிப்பாளர் மற்றும் உலகில் ஆப்டிகல் ஃபைபர் கேபிள் தயாரிப்பாளர்களிடையே ஆறாவது இடத்தைப் பெற்றிருக்கின்றனர். ஃப்யூஜிகுரா லிமிடெட் தற்போது ஆப்டிக்கல் ஃபைபர் கேபிளுக்கான தொழில் நுட்பத்தை மட்டும் தரும்; பிறகு அது சம்பந்தமான பிறபொருளைத் தயாரிக்க உதவும். முதலில் 10% மட்டும் எடுத்துக் கொண்டு பிறகு கூடுதல் 10% எடுத்துக்கொள்ளும்.

இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ. 41.57 கோடி ஆகும். இந்தத்திட்டம் சென்னை அருகே மறைமலை நகரில் நிறுவப்பட உள்ளது. திட்டம் மார்ச் 1997-க்குள்ளாக முடிவடைந்து உற்பத்தியும் உடனே ஆரம் பிக்கப்படும். இந்தத் திட்டத் திற்கான நிதி ஏற்கெனவே உள்ள மற்ற பங்குதாரர்களிடமிருந்து சமமாக ரூ. 24.38 கோடியாகவும் ரூ. 17.19 கோடி ஐ.ஸி.ஐ.ஸி.ஐ. செக்யூரிட்டீஸ் அண்ட் ஃபை னான்ஸ் லிமிடெட்டிமிருந்தும் பெறப்படும்.



மேற்குறிப்பிட்ட கூட்டுத் திட்டத்திற்கான ஒப்பந்தம் தமிழ்நாடு டெலிகம் யூனிகேஷன்ஸ் லிமிடெட், டிட்கோ மற்றும் ஃப்யூஜிகுரா இடையே 2.8.1996 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் சென்னையில் கையெழுத்து ஆயிற்று.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ. 4157 கோடி ஆகும். இது சென்னை - மறைமலை நகரில் நிறுவப்பட உள்ளது.

## 100 கோடி ரூபாய்க்கு வெளிச்சந்தைக் கடன் அரசு திரட்டுகிறது.

தமிழ்நாடு அரசு 100 கோடி ரூபாய் வெளிச் சந்தைக் கடன் திரட்ட உள்ளது கடன்களில் வெளியீட்டுத்தொகை 100 சதவிகிதமாகும். இக்கடன்களில் திரட்டப்படும் தொகை அரசின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் அரசுத் திட்டங்களின் முதலீட்டு செலவினங்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. மைய அரசின் அனுமதியுடன் திரட்டப்படும் இக்கடன் தொகைக்கு ஆண்டுக்கு 13.85 சதவீதம் வட்டி தரப்படும். வட்டித் தொகை ஒவ்வொரு ஆண்டும் இரண்டு தவணைகளில் செலுத்தப்படும். இக்கடன்கள் 2006 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் நாள் திருப்பித் தரப்படும். இதற்குரிய முதலீடுகள் இந்த மாதம் (ஆகஸ்டு) 12 ஆம் நாள் முதல் பெற்றுக்கொள்ளப்படும். இதற்குரிய விண்ணப்பத் தாள்கள் சென்னை இந்திய ரிசர்வ் வங்கியிலும் மாவட்டத் தலைமை இடங்களிலுள்ள பாரத ஸ்டேட் வங்கியில் சில கிளைகளிலும் கிடைக்கும் என்று தமிழ்நாடு அரசு அவித்துள்ளது.

சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீர் அடுத்த மாத (செப்டம்பர்) இறுதிக்குள் கிடைக்கும் என்றும் அதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருவதாகவும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்

## தமிழ் நாட்டு ஏரிகளை மேம்படுத்த ஜப்பான் நிதியுதவி

தமிழ் நாட்டிலுள்ள 2500 சிறு பாசன ஏரிகளை மேம்படுத்த சுமார் 270 கோடி ரூபாய் நிதியுதவி ஜப்பான் நாட்டிலுள்ள அயல்நாட்டுப் பொருளாதார நிதி நிறுவனத்தின் மூலம் அளிக்க ஜப்பான் முன்வந்துள்ளது. முதல் கட்டமாக அந்நாட்டு ஐந்து பேர் அடங்கிய நிபுணர் குழு ஒன்று பெருந்திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான வரைமுறைகளை முடிவுசெய்ய 1.8.96 அன்று மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களைச் சந்தித்தது. விரைவில் திட்டம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் கொண்ட முன்னோடி அறிக்கையைத் தயாரித்து வழங்க வேண்டும் என்று அக்குழுவினரை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்

### புதிய சொற் பொழிவுகள்

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 1973 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றத்தில் மூன்று அறக் கட்டளைகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. அந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் 5.8.96 அன்று தொடங்கிவைத்தார். தென் இந்திய மக்களின் வாழ்க்கை மற்றும் பண்பு கூறுகளைப் பற்றிய ஆய்வுச் சொற்பொழிவுகள் இதில் இடம்பெறவுள்ளன.

## செய்திச்சரம்

# சுவையான செய்திகள்

## புகை பிடிக்காதீர்!


சீனாவில் உள்ள ஷ்யாங்காய் நகர வீதியில் யாரும் புகைப் பிடிக்கக்கூடாது என அரசு தடை விதித்திருக்கிறது. 400 மீட்டர் நீளமுள்ள அவ்வீதியில் உள்ள கடைகள், பள்ளிகள், தனியார் அமைப்புகளுக்கெல்லாம் இது குறித்த அரசு ஆணைகள் மிகக் கடுமையோடு அனுப்பப்பட்டுள்ளன. 1984ல் இதே ஷ்யாங்காய் நகரில் பொது இடங்களில் யாரும் புகைபிடிக்கக் கூடாதெனத் தடைவிதிக்கப்பட்டது. புகையால் வரும் கேடுகள், பற்றி விஞ்ஞானிகள் தெரிவித்த பயங்கர முடிவுகளே இதற்குக் காரணமாம்!

## வெங்காய பிஸ்கட்:

'நியூட்ரின்' சாக்லேட் கம்பெனி யினர் வெங்காயச்




சுவையோடு கூடிய பிஸ்கட் ஒன்றைப் புதிதாக 'டின்'களில் அடைத்து விற்பனை செய்துவந்தனர்; கேரளா முதலான மாநிலங்களில் இதன் விற்பனை அதிகமாகிவிட்டது. ஆகவே, அந்த வெங்காய பிஸ்கட்டை அவர்கள் 150 கிராம் பாக்கெட்டாகவும் உருவாக்கி விற்கிறார்கள். 14 ரூபாய் விலை கொண்ட அதன் விற்பனை எப்படியிருக்குமோ தெரியவில்லை.



ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து 'அரியான்' என்ற விண்வெளிக் கலங்களை உருவாக்கி வருகின்றன; அமெரிக்காவில், பிரெஞ்சு-கயானாவில் செலுத்தப்பட்ட 'அரியான்-5' என்கிற ராக்கெட் புறப்பட்ட நான்கே நொடிகளில் தாறுமாறாக செல்லத் தொடங்கியது. அதிர்ந்து போய்விட்ட விஞ்ஞானிகள் அதை நடுவானிலேயே வெடிக்கச் செய்துவிட்டனர். அதைச் சிதைத்ததால் உண்டான இழப்பு மட்டுமே ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபாய்.

## செல்லுலரால் ஆபத்தா?

செல்லுலர் போனைப் பயன்படுத்துவதால் மூளைக்கட்டி வரும்; ஹேர் டிரையரால் பெருந்தீமை ஏற்படும். அதிக அழுத்தத்தில் உள்ள மின் கம்பிகள்தான் தற்கொலைகள் அதிகம் ஏற்படக் காரணம் - என்றெல்லாம் பேசப்படுவது பற்றி ஓர் ஐந்தாண்டுக்கால ஆய்வு நடத்த சுவிட்சர்லாந்தில் இருக்கின்ற ஜெனீவாவில் ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வு நமது உடல்நலத்திற்கு மின் மற்றும் காந்தப் புலன்களால் கேடு உண்டாகுமா என்பது பற்றி ஆராய்ந்து தெரிவிக்குமாம்.



## உணவுக்கேற்ற மருந்து


சிங்கப்பூரைச்சேர்ந்ததேசியப் பல்கலைக்கழகத்தோடு மருந்துப் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சிக் கென 'எலி லில்லி' என்ற அமெரிக்க நிறுவனம் கூட்டுச் சேர்ந்திருக்கிறது. சிங்கப்பூரில் வாழும் பலநாட்டு மக்களும் பல்வேறு உணவுப் பழக்க வழக்கங்களைக் கொண்டிருக் கிறார்கள். அங்குள்ள சுற்றுப்புறச் சூழ்நிலைகள் சில நாட்டு மக்களுக்கு ஒத்துக்கொள்ளுவதில்லை; இதையெல்லாம் கருத்தில் கொண்டு அதற்கேற்ற மருந்துகளைத் தயாரிக்க விருக்கும் இந்த நிறுவனம் அடுத்த ஆண்டுமுதல் செயல்படத் தொடங்குமாம்.

## 'எஸ்டீம்-ஏ.எக்ஸ்'

'மாருதி உத்யோக் லிமிடெட்' நிறுவனத்தினர் 'எஸ்டீம்' வகையில் இன்னொரு புதுவகைக் காரை உருவாக்கியிருக்கிறார்கள்; ரூ. 5.42 இலட்சம் விலை கொண்ட இந்தக்கார் 'எஸ்டீம்-ஏ.எக்ஸ்' எனப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. தானியங்கிக் கியர் உடைய இவ்வகைக் கார்களின் மூலம் நெரிசலான பகுதிகளில் பயணம் செல்லுவது எளிதாக இருக்குமாம்.


## சாஃப்ட்வேர் ஏற்றுமதி

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் கம்ப்யூட்டர் சாஃப்ட் வேர்களின் அளவு அதிகரித்துள்ளது. 'வெஞ்சர் கேபிடல்' எனப்படும் முதலீட்டுத் திட்டங்களின் மூலமே இச்சாதனை ஆண்டுக்கு 50 சதவிகிதம் என்ற அளவில் நிகழ்த்தப்பட்டுவருகிறது. 1986ல் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் துறையின் மூலம் கிடைத்த வருவாய் ரூ. 140 கோடி என்றால், கடந்த நிதியாண்டில் இத்தொகை ரூ. 100 கோடியாக அதிகமாகியிருக்கிறது. உள்நாட்டு விற்பனையை அதிகரிப்பதிலும் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## உணவு உற்பத்தி

இந்தியாவில் இப்போது சுமார் 30,000 விவசாய விஞ்ஞானிகள் இருக்கின்றனர்; 49 மத்திய ஆய்வு மையங்களும், 30 தேசிய ஆராய்ச்சி மையங்களும், 16 திட்ட இயக்குநரகங்களும் உள்ளன. இவர்களின் மூலம் அல்லது இந்த அமைப்புகளின் மூலம் உணவு உற்பத்தியை விரைந்து பெருக்கவேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏன் தெரியுமா? இப்போது நம் இந்திய மக்கள் தொகை 90 கோடி; 21 ஆம் நூற்றாண்டின் நடுவிலேயே இது 160 அல்லது 180 கோடி என உயரக்கூடும். தற்சமயம் உணவு தானிய உற்பத்தி சுமார் 19.1 டன்தான். அடுத்த நூற்றாண்டில் 50 கோடி டன் உணவு தானியங்கள் தேவைப்படும் அல்லவா? அதற்காகத் தான் சொல்கிறோம், விளை பொருள் உற்பத்திப் பெருக்கத்தில் இப்போதிருந்தே நாம் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்று!



# வேலை கிடைக்கும்

**இரா. சத்பதி** இ.ஆ.ப.,
ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
தமிழ்நாடு அரசு

**மா**வட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இயங்கும் தொழில் நெறி வழிகாட்டும் பிரிவானது, அலுவலக வளாகத்திலேயே, பல்வேறு வகையான வேலைவாய்ப்புகளைப் பெற எந்தெந்த வகையான கல்வித் தகுதிகளைப் பெறவேண்டும் என்ற விவரங்களை இளைஞர்கள் பார்வைக்காக விளம்பரப்படுத்துகிறது. இம்மாதிரியான விவரங்கள் நீங்கலாக ஏனைய விபரங்களை, அன்றாடம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் வேலை தேடுவோர்களிடையே சொற்பொழிவாற்றி விளக்கிக் கூறுகிறார். மாநில இயக்கத்தின் மூலம் தொழில் உலகத்திலுள்ள தொழில்கள்பற்றிய விவரங்கள் சிற்றேடுகளாக அச்சிடப்பட்டு பள்ளி இறுதி வகுப்பு மேல்நிலை வகுப்பு மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களிடையே விநியோகிக்கப்படுகிறது. இதன் பயனாக இளைஞர்கள் மாணவப் பருவத்திலேயே தொழில் உலகத்தைப் பற்றி அறிய வாய்ப்பு உருவாகிறது.

பொதுவாக வேலையில் காத்திருப்பவர்கள் அதிக அளவில் இருந்து, வேலைகள் குறைவாக இருக்கும் நிலையில், சில தொழில்களில் பணிக் காலியிடங்களிலிருந்தும் தகுதிபடைத்தவர்கள் இல்லை என்ற நிலை காணப்படுகிறது. உதாரணம் சிறப்புப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆய்வகத் தொழில் நுட்பப் பணியாளர்கள் போன்ற பணிகளாகும்.. இம்மாதிரியான ஆள்பற்றாக்குறையுள்ள தொழில்களைப் பற்றி இளைஞர்களிடையே அவ்வப்போது விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இம்மாதிரியான தகவல்கள், இளைஞர்கள் தங்களைத் தகுதியுடையவர்களாக்கி குறுகிய காலத்திலேயே வேலையில் அமர்த்தப்படச் செய்ய ஏதுவாக அமைகின்றன.

**கண்பார்வையற்றோருக்கான வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம்**

வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் உயிர்ப்பதிவேட்டில் காத்திருக்கும் கண்பார்வையற்றோருக்கு ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு வேலைவாய்ப்பற்றோம் நிவாரண உதவித் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

1. பட்டதாரிகள் / முதுநிலைப் பட்டதாரிகள். – மாதம் ரூ. 250/-
2. மேல்நிலைக் கல்வி – மாதம் ரூ. 200/-
3. எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் அதற்கும் கீழ் – மாதம் ரூ. 150/-

**வேலைவாய்ப்பிற்காக நடத்தப் பெறும் போட்டித் தேர்வுகள்**

இன்றைய நிலையில் பெரும்பாலான அரசுத்துறை நிறுவனங்கள் அவற்றிலுள்ள பணிக் காலியிடங்களுக்குப் பணியாளர்களைத் தேர்வு செய்வதற்குப் போட்டித் தேர்வுகள் நடத்துகின்றன. பள்ளியிறுதித் தேர்வுக்கும் குறைவான கல்வித் தகுதியைக் குறைந்த பட்சக் கல்வியாகக் கொண்டுள்ள பணிக் காலியிடங்களைத் தவிர அனைத்துப் பணிக் காலியிடங்களுக்கும் பெரும்பாலான அரசுத் துறை நிறுவனங்கள் போட்டித் தேர்வுகளின் மூலமே பணியாளர்களைத் தேர்ந்து எடுக்கின்றன. இப்போட்டித் தேர்வுகள், பொதுக் கல்வித் தகுதியின் அடிப்படையில் பள்ளியிறுதி அல்லது மேல்நிலை வகுப்பு மற்றும் பட்டப் படிப்பைக் குறைந்த பட்ச கல்வித் தகுதியாக கொண்டவையாகும்.

இந்த இருவகையான போட்டித் தேர்வுகள் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம் ஆயுள் காப்பீட்டுக் கழகம், இரயில்வே பணியாளர் தேர்வு வாரியம் போன்ற பெருமளவில் பணியாளர்களைப் பணியமர்த்தும் தேர்வு செய்யும் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

இது நீங்கலாக, தொழில் நுட்பப் பணி காலியிடங்களுக்காக சம்பந்தப்பட்ட தொழிலில்

பட்டம் மற்றும் பட்டயப் படிப்புப் பயின்ற இளைஞர்களுக்காகவும் போட்டித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. நாட்டின் பாதுகாப்புத் துறையிலுள்ள உயர்நிலைப் பணிகளுக்குத் தனியாக தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

இம் மாதிரியான போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள வேண்டியதன் அவசியம் வேலைதேடும் இளைஞர்களிடம் பிழைப்பு நெறிச் சொற்பொழிவுகளில் வலியுறுத்திச் சொல்லப்படுகின்றது. மேலும், இம்மாதிரியான போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றிபெற மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய முழு விவரங்கள் அவ்வப்போது நடத்தப்பெறும் வேலை வாய்ப்புக் கருத்தரங்குகளின் வாயிலாக இளைஞர்களுக்கு வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட போட்டித் தேர்வுகளுக்காக ஆதிதிராவிட இளைஞர்களுக்கு இலவச பயிற்றுவிப்பு வகுப்புகள் நடத்தப் படுகின்றன.

**மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

1. கீழ்நிலை எழுத்தர் பதவி
2. உயர்நிலை எழுத்தர் / ஆடிட்டர்கள் / டிவிஷனல் அக்கவுண்டன்ட்பதவிகள்
3. வருமானவரி மற்றும் கலால் வரி ஆணையாளர் பதவிகள்
4. சுருக்கெழுத்தாளர் பதவி.
5. உதவியாளர் பதவி.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

தொகுதி 4-ல் சேர்க்கப்பட்டுள்ள பதவிகள்

வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம்:

1. எழுத்தர் பதவி
2. அலுவலர் பதவி

இது நீங்கலாக, தமிழ்நாடு காவல் துறையில், முதல் நிலைக் காவலர் பணிக் காலியிடத்திற்கான தேர்வையொட்டி, உடற்பயிற்சி தேர்வு மற்றும் எழுத்துத் தேர்வு ஆகியவற்றில் ஆதிதிராவிட இளைஞர்கள் அதிக அளவில் பயனுறும் வகையில் பயிற்றுவிப்பு வகுப்புகள் நடத்தப் படுகின்றன.

**தமிழ்நாட்டில் வேலையில்லாதோர்:**

1995 டிசம்பர் 31-ல் தமிழ்நாட்டில் 34,78,637 நபர்கள் வேலை வாய்ப்பிற்காகக் காத்திருந்தனர். இவர்களில் 22,84,025 நபர்கள் பள்ளி இறுதிக் கல்வி அல்லது அதற்கு மேல் கல்வி பெற்றவர்கள் ஆவர். மாத ஊதியம் பெறும் வேலைக் காலியிடங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதால் சுயவேலைவாய்ப்பிற்கான முயற்சிகள் இத்துறையால் எடுக்கப்பட்டு வருகிறது.

## அதிகாலையில் எழுந்திருக்க முடியுமா?

மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக்கோரிக்கை மீதான விவாதம் நடந்தது. விவாதத்துக்கு மாண்புமிகு அமைச்சர் ஆர்க்காடு திரு. வீராசாமி பதிலளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

சித்த மருத்துவம் சிறந்த மருத்துவமாக வளர்ந்து வருகிறது. மருத்துவத்தின் சிறப்பு வெளியே கொண்டுவரப்படும். எலும்பு முறிவுக்குப் புத்தூருக்கு செல்பவர்களைத் தடுக்க சென்னை அண்ணா நகரில் சிகிச்சை அளிக்கப்படும். யோகா சிகிச்சையில் அரசு அக்கறை செலுத்தும். மழைக்காலத்தில் எனக்கு மூச்சுத் திணறல் ஏற்படும். ஊசி போட்டால் இரண்டு நாட்களுக்கு நிவாரணம் கிடைக்கும். ஆண்டியப்பன் என்பவர் 10 நிமிடம் யோகா பயிற்சி ஒன்றைச் சொல்லிக்கொடுத்தார். இப்போது அந்த நோய் எங்கே போனது எனத் தெரியவில்லை இதனை மாண்புமிகு முதல்வரிடம் தெரிவித்தேன். இப்போது முதல்வரும் தினமும் 15 நிமிடம் யோகா பயிற்சி செய்கிறார்.

திரு. திருநாவுக்கரசு: எல்லா உறுப்பினர்களும் ஆண்டியப்பனைத் தேடிப் போக முடியாது. எனவே, அமைச்சரே எல்லாருக்கும் யோகா பயிற்சி சொல்லிக் கொடுத்தால் நல்லது.

அமைச்சர் ஆர்க்காடு திரு. வீராசாமி: அது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. மூச்சுப் பயிற்சி தான்.

முதல்வர் கலைஞர் : யோகா பயிற்சி அதிகாலையில் செய்ய வேண்டும். அதற்குக் காலையிலேயே எழுந்திருக்க வேண்டும். திருநாவுக்கரசால் அதிகாலையில் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்திருக்க முடியுமா? என்றவுடன் அவையில் சிரிப்பொலி எழுந்தது.

**பேரவையில் நகைச்சுவை**

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இது ஒரு தமிழக அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகும். படித்த மற்றும் தொழில் திறனுள்ள இளைஞர்கள் அயல்நாடுகளில் வேலைவாய்ப்புகள் பெற உதவுவதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்தத்துறையில் பெரும்பாலும் தனியார் நிறுவனங்களே ஈடுபட்டு வருகின்றன. இந் நிறுவனங்கள் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத்தர அதிகமான தொகையை இளைஞர் களிடமிருந்து பெறுகின்றன. இவ்வாறில்லாமல் அரசு நிறுவனத்தின் உதவியுடன் இளைஞர் களுக்கு இதுபோன்ற வாய்ப்பை அளிப்பதற்கே இந்நிறுவனம் 30.11.78 அன்று நிறுவப்பட்டது.

தமிழக அரசின் தொழிலாளர்நலம் மற்றும் வேலைவாய்ப்புத்துறைச் செயலாளர் இந்நிறு வனத்தின் தலைவராகவும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகவும் உள்ளனர். இந்நிறுவனம் துவங்கப்பட்ட திலிருந்து இதுவரை ஏறக்குறைய 4700 பதிவு தாரர்களை வெளிநாடுகளில் பணியில் அமர்த்தியுள்ளது.

இந்நிறுவனத்தில் இந்தியாவில் உள்ள எந்தப் பகுதியில் வசிக்கும் மனுதாரர்களும் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்யும் மனுதார்கள் தொடர்புள்ள தொழிலில் 2 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மற்றும் 'பாஸ்போர்ட்' வைத்திருக்க வேண்டும். இவை இல்லாத மனுதாரர்களின் பெயர்களும் பதிவு செய்யப்பட்டு 'ரிசர்வில்' வைக்கப்படுகின்றன. மனுதாரர்களிடமிருந்து கல்வித் தகுதிக்கேற்றவாறு ரூ. 150/- முதல் ரூ. 300/- வரை பதிவுக்கட்டணமாக வசூலிக்கப் படுகிறது. சவூதி அரேபியா, குவைத், லிபியா, ஐக்கிய அரபுக் குடியரசு போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் பல இந்நிறுவனத்தின் மூலம் பணியாளர்களைத் தேர்வு செய்கின்றனர்.

சவூதி அரேபியாவிலுள்ள சுகாதாரத்துறை, ஷார்ஜாவிலுள்ள தண்ணீர் மற்றும் மின்வாரியத் துறை போன்ற அரசு நிறுவனங்களுக்கு இந்நிறுவனத்தின் மூலம் பணியாளர்களைப் பணியில் அமர்த்துகின்றனர். அயல்நாடுகளில் இந்நிறுவனம் பணியாளர்களைப் பணியில் அமர்த்த வேலையளிப்போரிடமிருந்து எந்தக் கட்டணமும் வசூலிப்பதில்லை.

அயல்நாடுகளில் பணியில் அமர்த்த தனது நிர்வாகச் செலவின் பொருட்டு குறைவான பணிக்கட்டணம் மட்டுமே மனுதாரர் களிடமிருந்து பெறப்படுகிறது. இந்நிறுவ னத்தின் மனுதாரர்கள் பற்றிய விவரங்கள் கணிணி மயமாக்கப்பட்டுள்ளன. தற்போது ஏறக்குறைய 13,000 மனுதாரர்கள் அயல்நாடுகளில் வேலை வாய்ப்பு வேண்டி இந்நிறுவனத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். அயல் நாடுகளிலிருந்து மேலும் வாய்ப்புக்களைப்பெற வெளிநாடுகளில் உள்ள இந்தியத்தூதரங்கள் மற்றும் இந்தியாவில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆகியவற்றுடன் இந்நிறுவனம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

இந்நிறுவனம் சென்னை, செங்கை எம்.ஜி.ஆர்., தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் ராமசாமி படையாட்சியார், வடஆர்க்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, பெரியார், நீலகிரி மற்றும் பாண்டிச்சேரி (யூனியன் பிரதேசம்) ஆகிய மாவட்டங்களில் உள்ள மனுதாரர்களுக்கு 'பாஸ்போர்ட்' எடுத்துக் கொடுக்கும் பணியையும் செய்து வருகிறது. தனது பணியைப் பரவலாக்கும் நோக்கத்துடன் விமானப் பயணச்சீட்டு விற்கும் பணியையும் துவக்க இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது.


### முன்னேற வழி


முன்னேற வேண்டுமா? முதலில் நம்மிடம் இருப்பதைப் பயன்படுத்த வேண்டும். நம்மிடம் இருப்பது நம் அறிவு, நம் உடல், நாம் கற்றுக்கொண்ட தொழில், நமது உறவினர்கள், நமது நண்பர்கள், நாம் வாழும் சூழ்நிலை இவற்றையெல்லாம் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். பிறகு அவைகளை எப்படிப் பயன்படுத்தினால் நாம் முன்னேற முடியும் என்று சிந்திக்க வேண்டும். அப்போது முன்னேறு வதற்கான வழிக் கதவு தானே திறந்து விடும்.

– ஆண்ட்ரூ கார்னஜீ

# நீர் மேலாண்மை

**சிவ. சூரியன்,** இ.ஆ.ப.,
வேளாண்மை கூடுதல் இயக்குநர்
(பணி மேலாண்மை)
தமிழ்நாடு அரசு







**நீ**ரின்றி அமையாது உலகு! இந்த நில்லா உலகில் நிலைத்துவிட்ட உண்மை இது.

கடலின் நடுவில் இருந்து கொண்டு ஒருவன் வருத்தப் பட்டானாம்! ''கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் தண்ணீர் - ஆயினும், தாகம் தணிக்க ஒருவாய் தண்ணீர் இல்லையே!''

ஆம், ஊரெல்லாம் தண்ணீர் இருந்தாலும் அதனை உபயோகிக்க முடியாவிட்டால் அத்தண்ணீரால் யாது பயன்?

அகில உலகப் பரப்பில் எண்பது விழுக்காட்டைத் தண்ணீர் தன்னகத்தே வைத்துக் கொள்கிறது. காடும், மலைகளும், நாம் வசிக்கும் நிலப்பரப்பும், வேளாண்மை நிலங்களும் இருபது விழுக்காடுகள் மட்டுமே! இப்படி எண்பது சதவீதமாகப் பரந்துகிடக்கின்ற நீர்ப் பரப்பில் 97% உப்பு நீராய்க் கடலில் அலையோசை எழுப்புகிறது.


வடதுருவத்திலும், தென் துருவத்திலும் 2% பனிக் கட்டியாகப்படுத்துக்கொண்டிருக்கிறது.


குடிநீருக்கும், வேளாண்மைக்கும், தொழில் துறைக்கும் பயன்படுத்தப்படுவது மீதமுள்ள ஒரு சதவீதத் தண்ணீர் மட்டுமே.

என்ன, வியப்பாக உள்ளதா? அதுதான் உண்மை!

**நிற்காமல் நடக்கும் நீர் சுழற்சி**

வானில் பறக்கலாம், மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம்.







அடுத்து சிகரத்தில் அடியெடுத்து வைக்கலாம். கடலில் மிதக்கலாம். வினாடி நேரத்தில் இவ்வுலகின் எப்பகுதியையும் அழிக்கலாம்.

அணுவைப் பிளந்துவிட்டோம். ஆற்றலை வளர்த்துக்கொண்டோம். அறிவை உயர்த்திக் கொண்டோம். ஆனால் நீர் வளத்தை உற்பத்தி செய்வோம் என்ற உறுதியை விஞ்ஞானம் இன்றளவும் தரமுடியவில்லை.

இயற்கையின் அற்புதமான பொருள் தண்ணீர். அரிய பொருள் வானத்தில் கதிரவன், கீழே கடல் நீர். கதிரவன் வெப்பத்தில் காய்ந்து, கடல் நீர் ஆவியாகி, வானோக்கிச் செல்கிறது. மேகமாய்ப் பயணிக்கிறது. மென் காற்றால் தழுவப்பட்டு, மழையாகிப் பொழிகிறது. நில மங்கையைத் தழுவுகிறது. சிற்றோடையாய், நதியாய், வெள்ளமாய்க் கடலோடு கலக்கிறது. ''நீர்ச் சுழற்சி நிற்காமல் நடக்கிறது. வான் மழையின் சிறப்பே இதுதான்.''

நிலத்தைத் தோண்டும்போது தண்ணீர் கிடைக்கிறது. தங்கம் கிடைக்கிறது. நிலக்கரி கிடைக்கிறது. இரும்பு கிடைக்கிறது. இல்லாத பொருள் இல்லை என்று சொல்லும் வண்ணம் உலோகங்கள் பூமிக்குள் புதைந்திருக்கிறது.

பெட்ரோல், எண்ணெய், உலோகங்கள் ஒரு நாள் இல்லாமல் போகலாம். ஆனால் நீர் என்றும் கிடைக்கும். கடல் இருக்கும்வரை, கதிரவன் இருக்கும் வரை,நீர்ச் சுழற்சி இருக்கும் வரை தண்ணீர் கிடைக்கும்.

ஆற்றங்கரையோரம் மனிதன் வாழத் தலைப்பட்டதற்குக் காரணமே குடிநீருக்காகத் தான். நீரின் செழுமை நாகரீகத்தை வளர்த்தது. ஆற்றங்கரை, நாகரீகத் தொட்டில்களாயிற்று.

ஆற்றின் எல்லையைத் தாண்டி, பூமிப் பரப்பில் மனிதன் வாழ முற்பட்டபோது, தண்ணீர் எடுத்துச் செல்ல முற்பட்டான். வாய்க்கால் வெட்டினான், குளம் வெட்டினான், கிணறு தோண்டினான். தனக்குப் பயன் படுத்தினான். வீட்டு விலங்குகளுக்குப் பயன்படுத்தினான். வேளாண்மைக்குப் பயன் படுத்தினான்.

விஞ்ஞானமும் நாகரீகமும் வளர்ந்தது. தொழில்கள் பெருகின. அத்துடன் மக்கள் தொகையும் பெருகியது. அதனால் எல்லாத் துறைகளிலும் உற்பத்தி அதிகம் வேண்டும் என்ற நிலை உண்டானது.

மக்களுக்கு உண்ண உணவு வேண்டும். உடுக்க உடை வேண்டும். இருந்து வாழ்க்கை நடத்த வீடு வேண்டும். உணவு உற்பத்தியைப்


பெருக்க நீர் வேண்டும். நீர் வளம் இல்லாமல் பெட்ரோல் வளம் நிறைந்த நாடுகளும் நீரைத் தேடுகின்றன.

பணத்தை வாரியிறைக்கின்றன. பச்சைச் செடிகளை, பசுமரத்தை, பழச்சோலைகளைக் காணத் துடித்துச் செயல்படுகின்றன. ''நீரின்றி அமையாது உலகு'' என்று சொன்னதன் பேருண்மை உலகுக்குத் தெரியலாயிற்று.

ஒரு பருவத்தில் வறட்சி, மற்றொரு பருவத்தில் வெள்ளம். வான்மழை வருவது தடைப்பட்டால், வறட்சி; வான்மழை கொட்டினால் வெள்ளம். வறட்சியை வெல்ல வேண்டும், வெள்ளத்திலிருந்து மீள வேண்டும். ஒரு பகுதியில் கிடைக்கின்ற மழை அளவில் எந்த நமக்குக் கிடைக்கின்ற அந்தப் பொருளின் அளவை வைத்துக்கொண்டு மிகச் சரியான முறையில் பயன்படுத்தி, தேவையை நிறைவேற்றிக் கொள்வதே சிறந்த மேலாண்மை. மேலாண்மை எல்லா இடங்களிலும் தேவைப் படுகிறது.

நீர் மேலாண்மை, நில மேலாண்மை, பயிர் மேலாண்மை பூச்சி நோய் மேலாண்மை, உர மேலாண்மை, அரசு மேலாண்மை, ஆட்கள் மேலாண்மை என்று மேலாண்மை இன்று மேலாதிக்கம் பெற்று விளங்குகிறது.

ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றவள் தன் குழந்தைகளுக்குப் பகிர்ந் தளித்து, சோறூட்டிப் பசியாற்றுகிறபோதே,



மாற்றமும் இல்லை என்கிறது விஞ்ஞானம். இந்த அடிப்படையில் விஞ்ஞானம் திட்ட மிடுதலுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

எனவே ஒரு சதவீதமாய் ஒடுக்கப் பட்டிருக்கும் நீரை முழுமையாக விரைய மின்றிப் பயன்படுத்த நீரை மேலாண்மை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

திட்டமிடுதல், மேலாண்மை இரண்டும் இரு கண்கள். ஒரு பொருளின் தேவையை, சிறந்த மேலாலராகிவிடுகிறாள். அடுப்பங்கரை முதல் ஆற்றங்கரை வரை இன்று மேலாண்மை தேவைப்படுகிறது.

இந்தியாவில் கடந்த சில பத்தாண்டுகளாக மேலாண்மை அனைத்துத் துறைகளிலும் அடியெடுத்து வைத்துள்ளது. ஆனால் நீர் மேலாண்மை தமிழகத்திற்குப் புதிதல்ல. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே நீர் மேலாண்மைதமிழகத்தில் வேரூன்றியதால்தான் ஏரிகளையும், குளங்களையும் மன்னர்கள்

வெட்டினார்கள். நீரைத் தேக்கி வைத்து, தேவைக் கேற்பப் பயன்படுத்தி நீர் மேலாண்மையின் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.

பருவ மழையின்போது கிடைக்கும் நீரைத் தேக்கி வைத்து, குடிநீருக்கும், வேளாண் மைக்கும் பிற தொழில்களுக்கும் பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளதனால் நீர் மேலாண்மை அவசியமாகின்றது.

அளவுக்கு அதிகமான தண்ணீரானாலும் ஆபத்து தானே! சரியான அளவை அறிந்து திறமையுடன் நீர் மேலாண்மைக் கூறுகளின்படி நிர்வகித்தால் வீணாகும் நீரைச் சேமிப்ப தோடல்லாமல் தேவையறிந்து மற்ற பயிர் களுக்கும் வழங்கி உற்பத்தித்திறனை மேம் படுத்தலாம்.

**தமிழ்நாட்டின் நீர்வளம்**

மேற்பரப்பு நீர் வளம், நிலத்தடி நீர் வளம் என நீர்வளம் இரு வகைப்படும். மழை நீரும் ஆற்று நீரும் மேற்பரப்பு நீர் வளம். நிலத்தடி நீர் வளம், மண்ணுக்குள் இருக்கிறது. இதனை எடுத்துப் பயன்படுத்த வேண்டும். எடுக்கின்ற நீரின் அளவு, மண்ணுக்குள் ஊற்றாய் சுரக்க வேண்டும்.


தமிழகத்திற்குப் பருவமழையால் ஆண்டு தோறும் சராசரியாக 940 மி.மீ மழை கிடைக்கிறது. ஜுன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக்காற்று மூலம் 305 மி.மீ மழை கிடைக்கிறது. கேரளக் கரையோரம் புறப்படும் மேகக் கூட்டங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையினால் தடுக்கப்படுவதால் தமிழகத்தில் தென்மேற்குப் பருவக்காற்றால் மழை மிகுதியாய் இல்லை.

அக்டோபர் முதல் டிசம்பர் வரை வட கிழக்குப் பருவக்காற்று மழை கிடைக்கிறது. வங்கக் கடலில் உருவாகும் குறைந்த காற்றழுத்த மண்டலம் காரணமாக, இப்பருவத்தில் 450 மி.மீ மழை கிடைக்கிறது.

ஜனவரி -பிப்ரவரி மாதங்களில் 40 மி.மீ மழையும், மார்ச் முதல் மே முடிய 140 மி.மீ மழையும் கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 55 பாசன நீர்த் தேக்கங்கள் உண்டு. ஏரிகள் 39,000 இருந்தாலும் 25,600 ஏரிகள் வானம் பார்த்தவை. நீர்ப் பிடிப்புப் பகுதியில் மழை பொழிந்தால் மட்டுமே இந்தக் குளங்கள் நிரம்பும்.

தமிழ்நாட்டில் உள்ள பாசன நீர்த்தேக்கங் களில் மொத்தம் கொள் அளவு 225 டி.எம்.சி. 39,000 குளங்களின் மொத்தக் கொள் அளவு 390 டி.எம்.சி. ஒரு டி.எம்.சி. என்பது 100 கோடி கன அடியாகும். ஒரு கன அடியில் நீரின் கொள் அளவு 28 லிட்டர்.



பருவமழையினால் நமக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் மொத்த நீரின் அளவு 830 டி.எம்.சி. ஆறுகள் மூலமாக அண்டை மாநிலங்களிலிருந்து வரும் நீர் அளவு 430 டி.எம்.சி. ஆக, நமக்கு மொத்தமாகக் கிடைக்கும் மேற்பரப்பு நீரின் அளவு 1260 டி.எம்.சி. 97 டிஎம்.சி கொள்ளவு கொண்ட 'மேட்டூர் நீர்த்தேக்கம்' மட்டுமே தமிழ்நாட்டின் மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும். பெரியாறு நீர்த்தேக்கம் மிகப் பழமை யானது.

நிலத்து நீருக்கு ஆதாரம் மழை வளமே. மழை நீரில் 10 அல்லது 20% மண்ணுக்குள் சென்று நிலத்தடி நீர் வளமா கிறது. தமிழ் நாட்டின் பெரும் பகுதி கடினப்பாறைப் படிவங் களால் ஆனதால், திரும்பவும் ஊற்றுப் பெருகும் வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றன. படி வுப்பாறை பகுதியில் அதிக நீர் வளம் சுரக்கும். நிலத்தடி நீர் வளம் வற்றாத சுரங்கமல்ல.

நிலத்தடி நீரின் மொத்த அளவில் 15 சதவீதம் குடிநீருக் கும் தொழிற்சாலைகளுக்கும் ஒதுக்கப் பட்டுள்ளது. மீத முள்ளவை வேளாண்மைக்கு ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

மொத்த நிலத்தடி நீர்வளம்
- 30162 மி.கன.மீ.

நிலத்தடி நீர் எடுப்பு
- 11987 மி.கன.மீ.

தமிழகத்தின் நீர் வளம் மிகக்குறைவு. ஆண்டுதோறும் 60 லட்சம் எக்டேரில் பயிரிடப் பட்டாலும், 27 இலட்சம் எக்டேர் நிலம்தான் பாசன வசதி படைத்திருக்கிறது.

**மண்ணும் நீரும்**

வேளாண்மைக்கு நீர் வேண்டும். மண்ணின் தன்மைக்கேற்ப, பருவ நிலைகளுக்கேற்ப, நீரைப்பயன்படுத்திட வேண்டும். வேர்களின் மூலம் பயிர்கள் நீரை உறிஞ்சுகின்றன. உறிஞ்சப்படும் நீரில் ஒன்று முதல் மூன்று சதவீதம் மட்டுமே தனது சுய வளர்ச்சிக்குப் பயிர் பயன்படுத்துகிறது. மற்றவை இலைகள் மூலமாக ஆவியாகிவிடுகின்றன.

பயிருக்குப் பாய்ச்சப்படும் நீரில், மண்ணின் 'உச்ச நீர் கிரகிப்பு நிலைக்கு' மேல் உள்ளது. பயிருக்குக் கிடைக்காமல் மண்ணின் அடிப்பாகத்திற்குச் சென்று விடுகிறது.

ஆகவே, பயிரின் தன்மை, நிலத்தின் நீர் கிரகிக்கும் தன்மை ஆகியனவற்றை உணர்ந்து நீர் மேலாண்மை செய்தால், நீர் சிக்கனப்படும். வீணாகும் நீரின் அளவு குறையும். சாகுபடி பரப்பும் கூட்டப்படும்.

**பாசனமும், பயிர்களின் நீர்த் தேவையும்**

பயிருக்குத் தேவையான நீர் பாசனத்தால் கிடைக்கிறது. மழைநீரால் கிடைக்கிறது. மழையாலும் பனியாலும் நீர் கிடைக்காமல், பயிருக்குத் தண்ணீர்த் பற்றாக்குறை ஏற் படும்போது, செயற்கை முறை யால், தேவையான நேரத்தில் தேவையான முறையில் செய யப்படுவதே பாசனம்.

**பயிரின் நீர்த் தேவை என்பது என்ன?**

வெப்பத்தால், காற்றால் மண்ணின் மேல் பரப்பில் ஆவியாகும் நீர், பாசனத்தின் போது விரையமாகும் நீர், மற்றும் பிரத்தியேகச் செயல் களுக்குத் தேவைப்படும் நீர், பயிரின் நீர்த்தேவை எனப்படும்.

மண், பயிர்வகை, பருவகாலம், பயிர் வளர்ச்சி நிலை, சாகுபடி முறைகளைப் பொறுத்து, பயிரின் நீர்த்தேவை மாறுபடும்.


**கலைவாணர் நினைவுகள்**


## 47 வயது!

கலைவாணரைப் பார்க்க வந்த ஒருவர் ''அண்ணனுக்கு இப்ப என்ன வயது ஆச்சு'' என்று கேட்டார். உடனே இவர் ''எனக்கா? நாற்பது வயதாகி ஏழு வருசமாச்சு. ஆனால் நாற்பது போதும் அதிக ஆசை எதற்கு என்று அதோடு ஸ்டாப்பண்ணிக் கொண்டேன்'' என்றார். கேட்ட வருக்குச் சிரிப்புத் தாங்க முடிய வில்லை. உடனே மறுபடியும் கலைவாணர் சிரித்துக்கொண்டே ''நாற்பத்தேழு வயது என்றால் கிழவன் மாதிரித் தெரியுது பாருங்க. அதனாலே தான் அப்படிச் சொன் னேன்'' என்று கூறினார். வந்திருந் தவர் விழுந்து விழுந்து சிரித்தார்.

கடைசி காலத்தில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் அவருக்கு ஊசிமேல் ஊசி போட்டார் கள். உடனே டாக்டர்களை நோக்கி சிரித்துக்கொண்டே ''என் உடலில் செருப்புத் தைக்கிறீர்களா?'' என்று கேட்டார். டாக்டர்களுக்கே சிரிப்புத் தாங்க முடியவில்லை.

தமிழகத்தில் சாகுபடியாகும் பயிர்களில் அதிகமான நீர்த் தேவையுள்ள பயிர், நெல் குறைவாக நீர்த் தேவையுள்ள பயிர், பயறு வகைகள்.





**பாசன முறைகளில் நீர் மேலாண்மை**

சரியான முறையில் நீர்ப்பாசனம் செய்வதால் கீழ்க்கண்ட நன்மைகள் உண்டு.

1. சரியான அளவு நீர் நிலத்தில் எல்லாப் பகுதிக்கும் சரிசமமாகப் பரவும்.
2. நீர்ச்சேதம் தவிர்க்கப்படுகிறது. இதனால் கூடுதல் பரப்பு சாகுபடி செய்யமுடியும்.
3. பயிருக்குத் தேவையான நீர், தேவையான அளவு, தேவையான நேரத்தில் கொடுக்கப் படுவதால் கூடுதல் விளைச்சல் உறுதிப் படுத்தப்படுகிறது.
4. மண் அரிப்பு தடுக்கப்படுகிறது.
5. வடிகால் பிரச்சினை ஏற்படாது.
6. உப்புப் படிவம் வேர்ப்பகுதியில் சேராது.
7. அளவான தண்ணீர், உரத்திற்குப் பாதுகாப்பு, உரம் வீணாகாது.

பாசன முறையில் சரியான அளவு நீர் பாய்ச்சாவிட்டால் கீழ்க்கண்ட தீமைகள் உண்டாக வாய்ப்புள்ளது.

1. தேவைக்கு அதிகமான நீரால், நீர் மட்டம் உயரும் வாய்ப்பு ஏற்படும்.
2. வடிகால் வசதி கெடும்.
3. நிலம் நீரில் மூழ்கும்.
4. பயிர் விளைச்சல் குறையும்.
5. மண் அரிப்பு உண்டாகும்.
6. நிலத்தின் மேற்பரப்பில் உவர்ப்புக் கூடும்.
7. உரம், பூச்சி மருந்துகள் உபயோகம் மிகும்.

**பாசன நீர் விரையம்**

அளவற்ற பாசனம், வளைந்து நெளிந்து செல்லும் மண் வாய்க்கால், சமனில்லா வயல், வயல் வழி பாசனம் ஆகியவற்றால் பாசனம் செய்யும்போது பாசன நீர் விரையமாவதுண்டு. இதனை அளவான பாசனம், சமமான வயல், வளைவற்ற நேரான சிமெண்ட் வாய்க்கால், ஆகியவற்றால் பாசன நீர் விரையமாவதைத் தடுக்கலாம்.

**பாசன முறைகள்**

அ. நில மேற்பரப்புப் பாசனமுறைகள்

ஆ. நவீனமுறைப் பாசனம், என இருவகைப் பாசனங்கள் உண்டு.

**அ. நில மேற்பரப்புப் பாசனம்**

பாத்தி பாசனம், நீளப்பாத்தி பாசனம், சால் பாசனம் எனப் பயிர் வகை, மண்வகை, நீர் இருப்புக்கு ஏற்றவாறு பாசனமுறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

**பாசன மேலாண்மை**

அணைகளைக்கட்டி, நீரைத் தேக்கி, பாசனக் கால்வாய்கள் மூலமாகப் பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படுகிறது.

மதுரை மாவட்டம் பெரியாறு திட்டப் பாசனப் பரப்பில் கால்வாய்கள் சிமெண்ட் கால்வாயாக மாற்றப்பட்டது. இதனால் நீர் சேதாரம் தடுக்கப்பட்டது. பெரியாறு வைகை மேம்பாட்டுத்திட்டத்திற்கு முன்பு 63,300 எக்டேர் நிலம் பாசனம் செய்யப்பட்டது. விரிவுபடுத்தப்

பட்ட பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் காரணமாக 18,000 எக்டேர் நிலம் ஆயக்கட்டுப்பரப்பில் கட்டப்பட்டுள்ளது.

**நீர் மேலாண்மை**

1. பாசனத்திற்கு விடப்படும் தண்ணீர் தலை மடை, இடைமடை, கடைமடையென எல்லா நிலை நிலங்களுக்கும் சரிசமமாகக் கிடைக்க உறுதி செய்வது சுழற்சி முறைப் பாசனம்.

2. கால்வாய்களில் கிடைக்கும் நீர் அவற்றின் நிலப்பரப்பிற்கேற்ப, பயிர்த் தேவைகளின் அடிப்படையில் கணக் கிட்டு, முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைப்படி பாசனம் அளிக்கப் படுகிறது. இதனால் தேவைக்கதிகமான பாசனம் தடுக்கப்பட்டு நீர் மிச்சப் படுகிறது.

3. தலைமடை விவசாயி அதிக நீரைத் தேக்கி வைப்பதும், கடைமடைக் காரார் நீர் பற்றவில்லை என்று பரிதவிப்பதும் சுழற்சி முறைப் பாசனத்தால் சீரடைகிறது.

பெரியாறு வைகைப்பகுதியில் நெல்லுக்கு நீர் பாய்ச்சும் போது 6-10 செ.மீ. நீர் நிறுத்தப்பட்டு வந்தது. தொடர்ந்து நீர் நிறுத்தப்பட்டு வந்த நிலையை மாற்றி 5 செ.மீ. நீர் நிறுத்தி நீர் மறைந்தபின் நீர் பாய்ச்சுகிற புதிய முறை புகுத்தப்பட்டது. இதனால் நீர்தேங்குவது தவிர்க்கப்படுகிறது. பயிரின் மொத்த நீர்த்தேவை குறைக்கப்படுகிறது. உற் பத்தித் திறன் உயர்கிறது. 25 முதல் 30 சதவீதம் நீர் சேமிப்புக் கிடைக்கிறது.

தமிழகத்தில் 21 லட்சம் எக்டேர் நிலத்தில், நெல் சாகுபடியாகிறது. ஒரு எக்டேருக்கு நீர் மேலாண்மையினால் 100 கிலோ மகசூல் கூடுதலாய்க் கிடைத் தாலும், மொத்தசாகுபடிப் பரப்பிலிருந்து 2.1 லட்சம் டன் நெல் கூடுதலாகப் பெற முடியும். ஒரு டன் நெல் விலை ரூ. 5000 வீதம் கணக்கிட்டாலும், 105 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

**ஆ. நவீன முறைகள்**

1. தெளிப்பு நீர்ப்பாசனம், 2. சொட்டு நீர்ப்பாசனம் ஆகிய இரு நவீன முறைகள் நடைமுறையில் உள்ளன.

**1. சொட்டு நீர்ப் பாசனம்**

நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, சாகுபடி பரப்பைக் கூட்டிட, உற்பத்தியைப் பெருக்கிட சொட்டுநீர்ப்பாசனம் உதவுகிறது.

1959ம் ஆண்டில் இஸ்ரேல் நாட்டில் இதனை உருவாக்கினார்கள். பயிருக்குத் தேவைப்படும்


### பேரவையில் நகைச்சுவை


## அதற்குத்தான் உங்களை வெளியூருக்கு அனுப்புகிறோம்

தமிழகத்தில் அண்டை மாநிலங்களில் பொது விநியோக முறை எப்படி உள்ளது என்று கண்டறிந்து அதில் உள்ள சிறப்பு அம்சங்களை தமிழ் நாட்டில் புகுத்த தமிழக எம்.எல்.ஏ.,க்கள் திரு. சுப. தங்கவேலன், திரு. ஞான சேகரன், திரு. ராஜாரெட்டி, திரு. தாமரைக்கனி, திரு. முகமது இஸ்மாயில் திரு. கணேசன் மற்றும் அலுவலர்கள் கொண்ட குழு பிற மாநிலங்களுக்கு அடுத்த மாதம் அனுப்பிவைக்கப்படும், என்று மாண்புமிகு உணவு மற்றும் பொதுவிநியோகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள் அறிவித்தார்.

உடனே இருக்கையில் இருந்து எழுந்த தாமரைக்கனி ''வெளி மாநிலங்களுக்கு எங்களை அனுப்பப் போவதாக கூறினீர்கள். அடுத்த மாதம் உள்ளாட்சி தேர்தல் வருகிறது. எனவே எங்களை மாநிலம் விட்டு மாநிலம் கடத்த வேண்டாம். அதற்குப்பின் எங்களை அனுப்பி வைத்தால் நல்லது'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

பேரவைத் தலைவர் திரு. பழனிவேல் ராஜன் ''அதற்குத் தான் உங்களை வெளியூருக்கு அனுப்புகிறோம்'' என்று சொல்ல, உடனே சபையில் உறுப்பினர்கள் அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.





நீரை, நீர் விரையமின்றி, குழாய்கள் மூலமாகக் கொண்டு சென்று, பயிரின் வேர்ப்பாகத்தில் 'டிரிப்பர்கள்' மூலமாக நீர்கொடுக்கப்படுகிறது.

**நன்மைகள்**

1. பாசனநீர் சேமிப்பு 50% நீர் ஆவியாதல் நீர்க்கசிவு போன்ற இழப்புகள் இல்லை.
2. வேர்ப்பகுதியில் அளவான ஈரத்தன்மை, சீரான காற்றோட்ட' வீணாகாத உயிர்ச் சத்துக்கள் பயிர்கள் சீராக வளர உதவுகிறது. 30% கூடுதல் விளைச்சல் கிடைக்கிறது.
3. களைகள் குறைகின்றன.
4. வேலை ஆட்கள் எண்ணிக்கை குறை கிறது.
5. நிலத்தைச் சமன்படுத்தத் தேவை யில்லை.
6. உப்பு நீரையும், தீங்கின்றிப் பயிர் வளர உபயோகிக்க முடியும்.
7. மின்சக்தி குறைப்பு, டீசல் செலவு மிச்சம்.
8. மர வகைகளுக்கு மிகச் சிறந்த முறையில் பயன்படும்.
9. இரவு, பகல் எந்நேரமும் பாசனம் செய்யலாம்.
10. அரசு மானியம் வழங்கப்படுகிறது.

**2. தெளிப்பு நீர்ப் பாசனம்**

வானிறங்கி வரும் மழை நீர்போல, செடிகள் மீது தெளிப்பு நீர் விழுகிறது. செயற்கை மழையாகப் பொழிந்து நீர் விரையமாவதைத் தடுக்கிறது. குறைவான தண்ணீர், கூடுதல் பரப்பு உயர்ந்த உற்பத்தித் தெளிப்பு நீர்ப்பாசனத்தின் மகத்துவமாகும்.

**நன்மைகள்.**

1. இயக்குவது சுலபம். தேவையான நீர் பாய்ச்சியவுடன் மின் விளக்கை அணைப் பதுபோல் நிறுத்திவிட முடியும்.
2. நீர்க்கசிவு இல்லை.
3. குழாய்கள் மூலம் நீர் முழுமையாகப் பயிர் மேல் தெளிக்கப்படுகிறது.
4. நீரின் தேவை 25 முதல் 50 பங்கு குறைகிறது.
5. கூடுதல் பரப்பு சாகுபடிக்கு வழி அமைகிறது.
6. சீரான நீர்த்தெளிப்பு.
7. பூமியில் எல்லா இடங்களிலும் ஒரே அளவு ஆழத்திற்கு நீர் ஊறி இருக்கும்.
8. பயிர் வளர்ச்சி சீராக இருக்கும்.
9. நிலத்தைச் சமன் செய்யத் தேவை யில்லை.
10. மண் அரிப்பு இல்லை. மண் வள்ம் காக்கப்படுகிறது.
11. பாத்தி முறைப்பாசனத்தில் பயன் படுத்தும் நீரில் பாதி அளவைப் பயன்படுத்தி, பருத்தி, கடலை போன்ற பயிர்களில் கூடுதல் மகசூல் எடுக்க முடியும்.
12. மின்சாரம், டீசல் செலவு குறைவு, ஆட்கள் தேவை குறைவு. அரசு மான்யம் உண்டு.

**பாசன சங்கம்**

இயற்கையில் கிடைக்கின்ற மழை நீர், பாசன நீர்த்தேக்கங்கள், ஏரிகள் போன்றவற்றில்



தேக்கப்படுகிறது. இந்நீரைப் பயன்படுத்துவதில், பாசனச் சங்கங்கள் சிறந்த முறையில் பணியாற்ற முடியும். தலைமடை முதல் கடைமடை வரை நீர்ப்பாசனம் சீராக இருக்க, கடைமடை சாகுபடியாளருக்கு நீர்ப்பாசனம் உறுதி செய்யப்படுவதற்கும், விளைச்சல் உறுதிப்படுத்தப்படுவதற்கும், பாசனச் சங்கம் பாடுபட முடியும்.

***பாசனச் சங்கத்தின் பயன்கள்***

1. நீர் மேலாண்மையைப் பாசன சங்கம் ஏற்றுக்கொள்ளும்.
2. வாய்க்கால்களைச் சுத்தப்படுத்தப்படும் பணி ஆண்டுதோறும் செய்யப்படும்.
3. குடிமராமத்துப்பணிகளைச் சங்கம் செய்யும்.
4. நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு.
5. பராமரிப்புப் பணிக்கு அரசை எதிர் நோக்கும் அவசியம் இல்லை.
6. தங்கம் சாதிக்காததைச் சங்கம் சாதிக்கும். சுலபமாக அரசை அணுகிட சங்கம் துணையாக இருக்கிறது.

நீர் மேலாண்மை இன்றைய தேவை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

பெருகிவரும் மக்கள் தொகை. நீர்வளத்தை உயர்த்த முடியாத சூழ்நிலை. கிடைக்கும் மழை நீரைச் சிக்கனமாய்ப் பயன்படுத்தும் நேர்த்தி, தேவையறிந்து நீர்ப்பாய்ச்சுதல், நவீன பாசன முறைகளில் நாட்டம், நீர் விரையம் தடுக்கப் பாசன சங்கம் எனப் பல வழிகளில் விவசாயிகள் அக்கறை காட்டவேண்டும்.

நெல்லை உற்பத்தி செய்யலாம். நீரை உற்பத்தி செய்யமுடியாது. இருபங்கு ஹைட்ரஜனும் ஒரு பங்கு ஆக்ஸிஜனும் சேர்ந்து தண்ணீர் வேண்டுமளவு ஆய்வகத்தில் தண்ணீர் உற்பத்தி செய்துவிட முடியும். உணவு உற்பத்திக்கு நீர் தரமுடியும் என்ற உத்திரவாதம் தரும் விஞ்ஞான சாதனை அண்மைக்காலத்தில் நிகழ வாய்ப்பில்லை.

எனவே கிடைக்கின்ற நீரைச் சேதப்படுத்தாமல் செம்மையான நீர்மேலாண்மையின் மூலம் நில வளம் காப்போம். பயிர்வளம் பெருக்குவோம். உணவின்றி வாடுகிற மனிதன் உலகில் இல்லை என்ற நிலை உருவாக உழைப்போம், உயர்வோம். ●

## பேரவையில் நகைச்சுவை

### தேனிலவு

தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் மாவட்ட நிர்வாகம் போன்ற மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு திரு மோகன் சுந்தரசாமி (த.மா.க) பேசினார்.

அப்போது அ.இ.அ.தி.மு.க உறுப்பினர் திரு. தாமரைக்கனி இடையில் குறுக்கிட்டு உறுப்பினர் மோகன் கந்தசாமி இனி வரும் காலத்தில் தமிழ் மாநில காங்கிரஸ், ஆட்சிக்கு வரும் என்று கூறுகிறார். அப்படியானால் தி.மு.க.வுக்கும் தமிழ் மாநில காங்கிரசுக்கும் தேனிலவு முடிந்து விட்டதா? என்பதை அறிய விரும்புகிறேன், என்றார். உடனே மாண்புமிகு முதல்வர் கலைஞர் எழுந்து'' இதற்கு அண்ணா அவர்கள் ஒருமுறை கூறியதையே நினைவுபடுத்த விரும்புகிறேன். அதாவது தேனிலவு முடிந்துவிட்டது. குடும்ப வாழ்க்கை நடைபெறுகிறது என்றார்.

அப்போது சபையில் உள்ள உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.



# வெண்கலம் வென்ற இந்தியத் தங்கம்

அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப்பட்டியலில் இந்தியாவிற்குத் தனி நபர் பிரிவில் 44 ஆண்டுகளுக்குப் பின்னர் பதக்கம் கிடைத்துள்ளது. 1952-ஆம் ஆண்டு ஹெல்சிங்கியில் நடந்த ஒலிம்பிக்கில் இந்திய மல்யுத்த வீரர் கே.டி. ஜாதவ் வெண்கலப் பதக்கம் வென்றார். அதன் பின்னர் ஒலிம்பிக்கில் தனி நபர் பிரிவில் பதக்கம் பெறும் இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமை 23 வயதான லியாண்டர் பயஸுக்குக் கிடைத்துள்ளது.



லியாண்டர் குடும்பத்துக்குக் கிடைத்துள்ள இரண்டாவது வெண்கலப் பதக்கம் இதுவாகும். இதற்கு முன்னர் 1972 ஆம் ஆண்டு மியூனிச்சில் நடந்த போட்டியில் லியாண்டரின் தந்தை வைஸ் பயஸ் இந்திய ஆக்கி அணியில் பங்கேற்று இந்தியாவுக்கு வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுதந்தார்..

## இரண்டு பதக்கங்கள் வென்ற இணையற்ற குடும்பம்

அட்லாண்டா ஒலிம்பிக்கில் வேறு எந்தப் பிரிவிலும் ஒரு பதக்கமும் வென்றிட இயலாத நிலையில் டென்னிஸ் மூலம் பயஸ் பெற்றுத் தந்துள்ள வெண்கலப் பதக்கம், இந்தியாவுக்கு ஆறுதல் அளிப்பதாக உள்ளது. வெண்கலப் பதக்கத்திற்காக நடந்த போட்டியில் பிரேசில் வீரர் பெர்னான்டோ மெலிஜெனியை 3-6, 6-2, 6-4 என்ற செட்களில் பயஸ் தோற்கடித்தார்.


## பரிசுகளும் பாராட்டுகளும்

இந்தியாவின் மதிப்பைக் காப்பாற்றிய பயஸுக்குப் பரிசுகளும், பாராட்டுகளும் குவிந்த வண்ணம் உள்ளன.

லியாண்டர் பயஸுக்கு, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா பாராட்டுத் தெரிவித்துள்ளார். ''ஒலிம்பிக்கில் அனைத்துப் போட்டிகளிலும் திறமையுடனும், உறுதியுடனும் விளையாடிய உங்களை (பயஸ்) பாராட்டுகிறேன்'' என்று டாக்டர் சர்மா தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

''பயஸின் முயற்சி நாட்டுக்கே பெருமை தேடித் தந்துள்ளது'' என்று மாண்புமிகு பிரதமர் தேவெ கௌடா தனது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

பயஸுக்கு மாண்புமிகு இந்திய மனித ஆற்றல் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. எஸ்.ஆர். பொம்மை ரூ. 5 இலட்சம் பரிசளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.



மாண்புமிகு மத்திய இணையமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன் தனது வாழ்த்துச் செய்தியில், ''பயஸ், மிகப் பெரிய வெற்றி மூலம் பதக்கப் பட்டியலில் இந்தியாவை இடம் பெறச் செய்துவிட்டார். இதன் மூலம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கு அளவில்லா மகிழ்ச்சியைத் தேடித் தந்திருக்கிறார். பயஸுக்கு ரூ. 2 லட்சம் பரிசு வழங்கப்படும். அதுமட்டுமின்றி அவர் தனது திறமையை வளர்த்துக் கொள்ளத் தேவையான நிதி உதவியும் வழங்கப்படும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

பயஸுக்கு பிரபல டென்னிஸ் வீரர் ரமேஷ் கிருஷ்ணனும், அவரது தந்தையும் முன்னாள் டென்னிஸ் வீரருமான ராமநாதன் கிருஷ்ணனும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

**அணியின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி**

ஒலிம்பிக்கில் தனக்கு கிடைத்த வெண்கலப் பதக்கத்தைத் தனது பயிற்சியாளர் ஜெய்தீப் முகர்ஜிக்கும், சக வீரரும் நண்பருமான மகேஷ் பூபதிக்கும் அர்ப்பணிப்பதாகப் பயஸ் கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:

''களத்தில் தனியாக விளையாடி வெற்றிப் பதக்கம் வென்றாலும் முகர்ஜியும், பூபதியும் இல்லாவிட்டால் எனக்கு இது கிடைத்திருக்காது, என்னுடனேயே இருந்து அவர்கள் அளித்த ஊக்கம்தான் எனது இந்த வெற்றிக்குக் காரணம்.

எனக்கு ஏராளமான ஆலோசனைகள் வழங்கியதோடு, எனது மன உறுதிக்கும் பலம் சேர்த்தனர். இந்த வெற்றி எனது திறமைக்கு மட்டும் கிடைத்த வெற்றி அல்ல. அணியின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி.

டென்னிஸுக்கு ஒரு பதக்கம்தான் கிடைத்திருக்கிறது. இன்னும் பல பதக்கங்கள் கிடைக்க வேண்டும். மற்ற நாடுகளில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் ஒரு வீரரை உருவாக்க முடிகிறது. ஆனால் இந்தியாவில் ஒரு வீரரை உருவாக்கக் குறைந்தது 10 ஆண்டு களாவது ஆகிறது. இந்த நிலைமை மாற வேண்டும்'', என்றார் பயஸ்.

மாவட்டங்களை

## எப்படி அழைக்க வேண்டும்?

### முதல்வரின் அறிவுரை

தமிழகத்தில் தற்போது 29 மாவட்டங்கள் உள்ளன. அவைகளின் பெயர்களை நிர்வாக வசதிக்காகக் கீழ்க்கண்டவாறு அழைக்கவேண்டும் என மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.

1. நாகை - காயிதேமில்லத் 2. திருவாரூர் - ஏ.டி. பன்னீர்செல்வம் 3. திண்டுக்கல் - மன்னர் திருமலை 4. கரூர் - தீரன் சின்னமலை 5. வைகை - வீரன் அழகுமுத்து 6. தென்னார்க்காடு வள்ளலார் 7. விழுப்புரம் - இராமசாமி படையாட்சியார் 8. திருச்சிராப்பள்ளி - பெரும்பிடுகு முத்தரையர் 9. திருநெல்வேலி - கட்டபொம்மன் 10. பசும்பொன் - முத்துராமலிங்கத் தேவர் 11. திருவண்ணாமலை - சம்புவராயர் 12. பெரம்பலூர் - திருவள்ளுவர் 13. வட ஆர்க்காடு - அம்பேத்கர் 14. பெரியார் 15. அண்ணா 16. காமராஜர் 17 எம்.ஜி.ஆர். 18. சிதம்பரனார் 19. ராஜாஜி ஆகிய மாவட்டங்களுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

ஏனைய மாவட்டங்கள் விவரம் :

20. சேலம் 21. கோயம்புத்தூர் 22. புதுக்கோட்டை 23. தஞ்சாவூர் 24. மதுரை 25. இராமநாதபுரம் 26. தர்மபுரி 27. கன்னியாகுமரி 28. நீலகிரி 29. சென்னை

''என்ன நலமா?'' என்று கேட்பதில் அமெரிக்காவில் இப்போது ஒரு புதுமுறை பரவி வருகிறது!'' காலையில் ஒருவரைச் சந்திக்கும் போது -'' என்ன நலமா? நேற்று நன்றாகத் தூங்கினீர்களா?'' என்றும் கேட்டுக் கொள்கிறார்கள்.

## தெரிந்து கொள்வோம்

ஆஸ்திரேலியாவில் - இருபத்தோரு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தேர்தலில் தகுந்த காரணமில்லாமல் ஓட்டுப்போடாமல் இருந்தால் அதற்குத் தண்டனையாக அபராதத் தொகை ரூ. 80/- வரை செலுத்த வேண்டுமாம்.

பண்டைய நாளில், ரோமாபுரியில், காலண்டர் பழக்கத்தில் இல்லாதபோது ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று ஊர்ப்பணியாளர் ஒருவன் தெருத்தெருவாக வந்து மாதப் பிறப்பை அறிவிப்பானாம். ரோமன் மொழியில் அப்படிக் கூவுதலைக் 'களோர்' என்பர். இதிலிருந்துதான்காலண்டர்பிறந்தது.

பில்லியர்ட்ஸ் விளையாட்டிற்கான பந்து களைச் செய்வதற்காக ஆண்டுக்கு 600 யானைகள் உலகத்தில் கொல்லப் படுகின்றனவாம்.

திருக்குறளில் வரும் மலர்கள் இரண்டே இரண்டு அவை - அனிச்சமலர், குவளைமலர். ஒரே ஒரு பழம் – நெருஞ்சிப் பழம். மரங்கள் - பனை, மூங்கில். விதை – குன்றிமணி.

நன்கு பழுத்த மாம்பழம் வாயு உபாதைகளைச் சமனப்படுத்தும். உடலுக்கு ஊட்டம் தரும். வீரிய விருத்தி உண்டாக்கும். இரத்த சுத்தி ஏற்படுத்தும என்று 'சரக சம்கிதா' தெரி விக்கிறது.

# மீண்டும் மேலவை

**த**மிழக சட்டசபையில் ஜூலை 27ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் 10 ஆண்டுகளுக்குப்பின்பு மேல்சபை மீண்டும் புத்துயிர் பெறுகிறது.

தமிழ்நாடு மேல்சபை கடந்த 1920-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சுதந்திரத்துக்குப்பின் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் 21.4.1952 முதல் தமிழக மேல்-சபை செயல்படத் தொடங்கியது. சபையின் மொத்த உறுப்பினர்கள் 72 பேர்களில் 12 உறுப்பினர்களை, மாநில கவர்னர் நியமித்து வந்தார். சட்டசபை, பட்டதாரிகள், ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மற்ற உறுப்பினர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது கடந்த 14.5.1986-ல் மேல்சபையை நீக்குவதற்கான தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. 1.9.'86-இல் மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று 1.11.'86 முதல் அதற்கான சட்டம் நடைமுறைக்கு வந்தது.


கடந்த 1989-ஆம் ஆண்டில் கலைஞர் அவர்கள் மீண்டும் தமிழக முதல்வரானபோது மீண்டும் மேல்சபை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அதைச் செயல்படுத்துவதற்கு முன்பு ஆட்சி கலைக்கப்பட்டது.

தற்போது மீண்டும் சட்டமன்றத்தில் 27.7.96 அன்று இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்குக் குடியரசுத்தலைவரின் முறையான ஒப்புதல் கிடைத்ததும் மேல்-சபை புத்துயிர் பெறும்.

## உழைப்பு

தற்காலத்தில் நாட்டில், 'உழைப்பு' என்ற சொல்லிற்கே, கஷ்டம் என்ற பொருள் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. சுவீகாரம் போவது, ஏதாவது பிரைஸ் அடிப்பது, புதையல் எடுப்பது போன்ற இலகு வழிகளில் வாழ்வதைத்தான் வாழ்க்கை என்று கருதத் தொடங்கிவிட்டார்கள்.

– கலைவாணர்




**புதிய கற்காலம்**
ஆசிரியர் :ராஜ்
பக்கம் : 128 - விலை ரூ. 30
நூலாசிரியரின் ஐந்தாவது சிறுகதைத் தொகுப்பான இந்த நூலில் - 'சாயம்' முதல் 'களவொழுக்கம்' ஈறாக 20 சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. கதைகளில் மட்டுமல்ல; 'சிதைந்து போன சோவியத் யூனியனின் நினைவிற்கு இப்புத்தகத்தைக் காணிக்கை' யாக்கியிருப்பதிலும் புதுமை தெரிகிறது.

**நிழல் கோபுரம்**
ஆசிரியர் : ராஜ்
பக்கம் : 151 - விலை ரூ. 30
'நிழல் கோபுரத்'திலிருந்து 'காற்றுக்கென்னவேலி' வரையான சிறந்த 15 சிறுகதைகளின் தொகுப்பாக விளங்கும் நூல் இது. நூலாசிரியர்கள் காதலிக்கும், மனைவிக்கும் நூல்களைக் காணிக்கையாக்கும் இக்காலத்தில், இந்த நூலின் ஆசிரியர் இதைத் தன் மாமியாருக்குக் காணிக்கையாகச் செலுத்தி யிருக்கிறார்!
– இவ்விரு புத்தகங்களையும் வெளியிட்டோர் :
**சுஜயா பப்ளிகேஷன்ஸ்,**
42, காமகோடி நகர், 4வது குறுக்குத்தெரு,
வளசரவாக்கம், சென்னை - 600 087.

**தினசரி தியானம்**
தொகுப்பாசிரியர் : ஆர்.கே. பிரபு
தமிழாக்கம் : ஜெயமணி சுப்பிரமணியம்
பக்கம் : 184 - விலை ரூ. 20
'கோபமின்றி, துவேஷமின்றித் துன்பத்திற்கு உள்ளாவது என்ற உதயசூரியனின் முன்னிலையில் மிகமிகக் கடினமான உள்ளமும் மிகவும் ஆழ்ந்த அறியாமை இருளும் மறைந்து விடும்' - என்பது போன்ற மனதைப் பக்குவப்படுத்தும் கருத்துகளின் தொகுப்பு நூலாக விளங்கும் நூல் இது.

**காந்திய சிந்தனைகள்**
ஆசிரியர் : டாக்டர் மா.பா. குருசாமி
பக்கம் : 202 - விலை ரூ. 22
காந்தியடிகள் தம் வாழ்நாளில் மேற்கொண்ட பலவகை நிர்மாணப் பணிகள், சிறைவாசங்கள், தியாகங்கள் - ஆகியவற்றோடு அவரது ஆசிரம விரதங்களின் தொகுப்பாகவும் விளங்குகிறது இந்த நூல். இந்திய வரலாற்றை அறிய இதுவும் ஓரளவுக்கு உதவக்கூடும்.
– இந்த இரண்டு புத்தகங்களையும் வெளியிட்டோர்:
**"காந்தி இலக்கியச் சங்கம்,**
காந்தி மியூசியம், மதுரை - 625 020.

**கருணையம்மன் அந்நாதி**
**பதிப்பாசிரியர் : நா. பாக்கிய சுந்தரி**
பக்கம் : 104 - விலை ரூ. 22
தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறந்த இடம்பெறும் சிற்றிலக்கிய வரிசையில் 'கருணையம்மன் அந்தாதி' என்ற பிரபந்தமும் ஒன்று, தேவாரத் திருத்தலங்களில் ஒன்றான அவினாசி கோயில் சிறப்பைக்கூறும் இது, சுவடி வடிவிலிருந்ததைத் தேடிப் பிடித்து, அச்சேற்றியிருக்கிறார்கள்.

**ஒப்பிலக்கியம் :**
**கொள்கைகளும் செயல்முறைகளும்**
ஆசிரியர் : முனைவர் கா. செல்லப்பன்
பக்கம் : 72 விலை ரூ. 15
ஒப்பிலக்கியக் கொள்கை நூற்றாண்டுக்கு நூற்றாண்டு மாறுபடுகிறது; இது பற்றிய ஆராய்ச்சி, தமிழிலக்கியங்களுக்குப் புதிய வெளிச்சங்களைத் தரும்; அகன்ற இலக்கியக் கொள்கைகள் வளரவும் வழிவகுக்கும். இந்த அடிப்படையில், நூலாசிரியர் ஆற்றிய 2 நாள் சொற்பொழிவே இந்த ஆய்வு நூல். ஆசிரியரின் ஒப்பிலக்கியப் பட்டறிவின் வெளிப்பாடாக இது திகழ்கிறது.
– இவ்விரு நூல்களையும் வெளியிட்டோர் :
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி.டி.டி. ஐ. அஞ்சல், தரமணி
சென்னை - 600 113.

**– இந்திரன்'**



# யாருண்டு இனிமேலே உன்போல் நல்லோன்!

நீரோடை நிலங்கிழிக்கும் நெடியபெருந் தமிழ் நாட்டில்
சீரோடு வாழ்ந்திருந்த கலையரசே! நீ,
வேரோடு சாய்ந்துவிழப் புயல்வீசும் என உணர்ந்தால்
கோடானு கோடிகரம் அப்புயலைத் தடுத்திருக்கும்!

''எதிர்ப்புகளை இளநகைப்பால் இடறிவிட்டு
இன்பத் திராவிடத்தின் விடுதலைக்குத் தலைமை ஏற்ற
என் தலைவன் அண்ணாவின் அருகிருப்பேன்,
என உரைத்து எழுந்திட்டாய்! அதற்குள்
சாவின் மடிதனிலே விழுந்திட்டாய்!

என்னுயிரே! இன்னமுதே! என்ன நினைத்(து)
உயிர்விட்டாய்?
''பொன்மலையைக் குவித்திட்டேன்:
இன்று புழுதிமலை
அடிவாரத்தில் கிடக்கின்றேன்'' எனச் சொல்லிப்
புகழ் மலையின் உச்சிக்குப் போனாயோ?

புதுமணியே! புகழ் முத்தே!
பொதுவுடமை முளைக்கின்ற 'ருசியா'வில்
கலைப் பயணம் நடத்துதற்குச் சென்றாயே;
அதுபோல எண்ணமிட்டோ பெரும் பயணம்
மேற்கொண்டாய்,
எம்மீது பெரும் பழியைச் சுமத்தி விட்டு!

கலையே... கற்பனையே!
அழகே.. அறிவே!
அன்பே... அறமே!
யாருண்டு இனிமேலே உன்போல் நல்லோன்!
நீயுண்டு! நின்புகழுண்டு... என்றென்றும் தமிழர்
நெஞ்சில்!

– 'கலைவாணரின் மறைவின் போது கலைஞர்' இயற்றிய கவிதை




'தமிழரசில் தாங்கள் வெளியிட்டிருந்த கலைஞரின் குறளோவியம் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன்; இதேபோல் கலைஞரின் கைவண்ணங்கள் அடிக்கடி இடம்பெறுமாறு செய்யுங்கள். தமிழரசை எங்களுக்கெல்லாம் மன நிறைவளிக்கும் இலக்கியப் பூங்காவாக்குங்கள்

**– ஆர். கீதா,**
பாளையங்கோட்டை

நீண்ட இடைவெளிக்குப்பின் புதிய பொலிவுடன் இலக்கிய மணம் கமழ வெளிவரும் தமிழரசு எங்களைக் களிப்புறச் செய்தது; தமிழாய்ந்த தமிழறிஞர்களைத் தமிழகம் மறந்துவிடுமோ? என்ற எங்கள் அச்சத்தைப் போக்கும் வகையில் அமைந்த தமிழரசுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்.

**– ச. சிவ கோபால்**
ஆர்.என். பாளையம்

கவிஞர்கள், கதாசிரியர்கள் ஆகியோரின் இனிய படைப்புகளை இப்போது போலவே தமிழரசில் தொடர்ந்து வெளியிடுங்கள்; அதே சமயத்தில் முதல்வர் கலைஞர் அரசின் அருமையான திட்டங்களை தவறாமல் அச்சிட்டு ஏழை எளிய மக்கள் படித்தறியச் செய்யுங்கள்.

**– செ. காமராஜ்**
வேப்பூர் செக்கடி, செங்கம்

வரலாறு படைத்த புகைப்படங்கள், கட்டுரைகள் இன்று போல் என்றும் தமிழரசில் இடம்பெறட்டும்; மக்கள் குறைபாடுகள் பற்றிக் கேட்டிருப்பதும் மிகநல்ல ஏற்பாடு.

**– வி. வேணுகோபால்**
பரதகுடி, குடந்தை

புதுப்பொலிவுடன் பூத்திருக்கும் 'தமிழரசு' கண்டு மனம் பூரித்தது. தீண்டத் தகாத கையேடாய்க் கிடந்ததைத் தீந்தமிழ்ப் பெட்டகமாய் மாற்றிவிட்டீர். காலமெல்லாம் பேசும் வண்ணம் இதழ் மலர்ந்துள்ளது. அரசுச் செய்திகளும் ஆன்றோர் வாக்குகளும் மெருகூட்டுகின்றன. வாழ்க.

**– பொற்கண்ணன்**
ஈரோடு 11

'தமிழரசு' உள்ளடக்கத்தின் கனம் உவப்பளிக்கிறது. புதுமைப்பித்தன் கதை அற்புதம்; எத்தனை முறை படித்தாலும் அலுக்காத எழுத்துக்கள் அவை. பொன்மொழிகள் மூலமாக அயல் நாட்டு அறிஞர் பெருமக்களையும் பத்திரிக்கைக்குள் இழுத்து வந்திருப்பது பாராட்டுக்குரியது.

**– அமுதோன்**
சென்னை - 17

துறைதோறும் தமிழ் மணக்கும்படி தனியே ஓர் அமைச்சரையே நியமித்த முதல்வர் கலைஞர் மனம்போல் வெளிவரும் தமிழரசுக்கு எனது நல்வாழ்த்து.

**– வைரி. தரளம்**
கோவி. பாளையம்

# வாசகர் இதயம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் :எம் அண்ணாமலை
ஆசிரியர் குழு : எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

அணையிலிருந்து
வரும் வெள்ளம்
ஆறுகளில் ஊர்ந்து ஓடி
கடை மடை கழனி தேடி
பயிர் பாதம் படிவதுபோல்

அரசின் திட்டங்கள் –

அடித்தட்டு மக்களின்
குடிசைக்கு எட்டும்போது
ஏற்படும் இன்பம் –
அன்னையவள் ஊட்டிடும்
அமுதம்
சிந்தாமல்
சிதறாமல்
மழலைவாய் சேரும்போது
மலர்கின்ற மகிழ்ச்சிக்குக்
கட்டியம் சொல்லும்!

எனவே –

கோட்டையிலிருந்து
குடிசைவரை செல்வோம்
எந்த இடையூறும்
இல்லாமல் செய்வோம்!
இதற்கெனவே –
தமிழரசில்
**எங்கள் ஊர்**
**பிரச்சினைக்கு**
இடம் ஒதுக்கி
உங்களோடு
வடம் பிடிக்கத்
தயாரானோம்!


# ஆசிரியர் மடல்

இனிவரும்
இதழ் தோறும்
உங்கள் எழுத்து
எழுந்துநின்று
வலம்வரும்!

இப்போதோ –
போட்டிபோட ஈட்டிமுனையாய்
எத்தனைக் கவிதைகள்!
அத்தனையும் தேன் சுனைகள்!
தேர்ந்தெடுக்கும்
நடுவர் குழுவைத்
திக்குமுக்காடச் செய்த
தீந்தமிழ்ப் பலாச் சுளைகள்!
பவுர்ணமியின் ஒளிக் கீற்று!

பாற்கடலின் இன்ப ஊற்று!
இருப்பினும் –
தேனிலே எச்சொட்டில்
இனிப்பு மிகுதி?
எப்படித் தீர்ப்பு எழுத?

எனவே,
எடுத்துக்காட்டாய்
உங்கள் (இந்த) இதழில்
சுவைத்திட
இருதுளிகள் மட்டும்!
ஓரிரு துளி
அடுத்த இதழிலும்
கிட்டும்!





தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



தோற்றம்
29-11-1908

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்

மறைவு
30-8-1957